திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:12, Pages:56
JULY-2025, Price Rs.20/-

ஜூலை 2025,
விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி
ஆனிவர ஆஸ்தானம்
16-07-2025 (புஷ்பப்பல்லக்கு)

## 02-06-2025 முதல் 10-06-2025 வரை திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கு நடைபெற்ற பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்







*அத₂ சைநம் நித்யஜாதம்*
*நித்யம் வா மந்யஸே ம்ருதம்।*
*தத₂ாபி த்வம் மஹாப₂ாஹோ*
*நைவம் சோசிதுமர்ஹஸி॥*

**இந்த ஆத்மா எப்பொழுதும் பிறந்து கொண்டேயிருப்பது; அவ்வாறே எப்பொழுதும் இறந்து கொண்டேயிருப்பது என்று நீ கருதினாலும் கூட, நீண்ட கைகளை உடையோனே! நீ இவ்வாறு வருத்தப்படுவது நன்றன்று.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–26*

*வேதாந்த தேசிக கடாக்ஷ விவ்ருத்தபோதம்*
*காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் ।*
*வத்ஸாந்வவாயம் அநவத்யகுணைரூபேதம்*
*பக்த்யா பஜாமி பரவாதிபயங்கரார்யம் ॥*

**வேதாந்த தேசிகருடைய கடாக்ஷத்தினால் வளர்ந்த அறிவுடையவரும், அழகிய மணவாள மாமுனிகளுடைய கருணைக்கு ஒரே கொள்கலமானவரும், ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் உதித்தவரும், குறைவற்ற குணங்களுடன் கூடியவருமான ப்ரதிவாதி பயங்கராசார்யரை அடியேன் ஸேவிக்கிறேன்.**

*–தனியன்*







ஸப்தகிரிக்கு சந்தா செலுத்திடுங்கள்!!
ஸப்தகிரிவாசனின் அருளைப் பெற்றிடுங்கள்!!

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- "ஸப்தகிரி" திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- "ஸப்தகிரி" இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- "ஸப்தகிரி" இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- "ஸப்தகிரி" இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- "ஸப்தகிரி" சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- "ஸப்தகிரி" இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

மேலும் தகவல்களுக்கு :
0877- 2264543, 2264359



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

ஜூலை 2025

மலர் 04 இதழ் 12


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| வேங்கடவனிடத்திலே பெரியாழ்வார் கொண்ட பொங்கும் பரிவு -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| ஸ்ரீஆண்டாள் பாசுரங்களில் பறவைகள் - திரு.ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 11 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 15 |
| ஆசார்ய மஹிமை - திரு. ஆர். கண்ணன், பெங்களூரு. | 16 |
| உலகாரியனார் போற்றிய திருக்கண்ணமங்கை ஆண்டான் - திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை. | 18 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 20 |
| பெரியாழ்வாரும் ஸ்ரீமந்நாதமுனிகளும் - தாமல் திரு.வி.பி. சடகோபன், சென்னை. | 22 |
| திருநெடுங்குன்றம் - பேராசிரியர் ஜி.நரசிம்மன், அனந்தபுரம். | 24 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருவேங்கடம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 31 |
| கருடபஞ்சமி - திரு. என். சிவராமன், உள்ளகரம். | 32 |
| தனமும் தானமும் - திரு. கு. அரங்கநாதாச்சாரியார், வரிச்சிக்குடி. | 35 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: சங்கு சக்கரம் ஏந்திய இறைவடிவங்கள் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 39 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : கூரத்தாழ்வான் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: பூபாரம் தீர்க்கத் துணை புரிந்த ஷண்முகரும் சிவபெருமானும் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 42 |
| ஆயுர் வேதம்: ஆலமரம் -திருமதி வி.உஷா, திருப்பதி. | 46 |
| ராசிபலன்கள் : ஜூலை 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை: ரகசியம் அறிவோம்! - திரு.எஸ். இராமதாஸ், புதுச்சேரி. | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : குழந்தைப் பருவத்திலே நல்லதை செய் | 52 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

வெளியீட்டாளர்-ஆசிரியர், பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : புஷ்ப் பல்லக்கில் உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீஆண்டாள் (சித்திரம் – மணியம் செல்வன், சென்னை)



உங்களுடன்

# குருவே தெய்வம் !

ஸ்ரீஆண்டாள் தான் அருளிய திருப்பாவையில் “உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது'' என்று ஸ்ரீகண்ணபிரானைக் குறித்துப் பாடியிருக்கிறாள். நமது பாரதீய கலாச்சாரத்தில் குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் இடையிலான உறவும் இப்படிப்பட்டதாகவே விளங்குகின்றது.

“லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம் அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்”

என்ற சுலோகமானது ஸ்ரீமஹாலக்ஷ்மியின் நாதனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடமிருந்தே குருபரம்பரை தொடங்குவதாகக் கூறுகின்றது. ஸ்ரீவைஷ்ணவர்களைப் பொறுத்தவரையில் ஸ்ரீமந்நாராயணனே பிரதம ஆசாரியன் ஆவார். இதன் காரணமாகவே பார்த்தனுக்கு பகவத்கீதையை உபதேசித்த ஸ்ரீகண்ணபிரானும் “கீதாசாரியன்” என்ற திருப்பெயரைத் தாங்கியுள்ளான்.

ஒருவருக்கு எம்பெருமானின் அருள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் அவர் தம்முடைய ஆசாரியனைச் சரணமடைந்து முக்தி பெறலாம். ஆசாரியன் தம்முடைய சிஷ்யருக்காக வேண்டிக் கொள்ளும் பொழுது அதனை எம்பெருமானால் நிராகரிக்க இயலாது.

“ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்”

அத்வைத தத்துவத்தினைப் போதித்த ஸ்ரீஆதிசங்கரரின் வழி வந்த மெய்யன்பர்கள் அனுதினமும் அநுஸந்தானம் செய்கின்ற இந்த சுலோகமோ, ஸ்ரீபரமேஸ்வரனாகிய சிவபெருமானிடமிருந்து குருபரம்பரை தொடங்கி இன்று வரையிலும் அது தொடர்ந்து வருவதாகக் குறிப்பிடுகின்றது.

இங்ஙனம், பாரத கலாசாரத்தின் மிக முக்கியமான இரண்டு தத்துவங்களாகிய விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய தத்துவங்களைப் பின்பற்றுபவர்களுக்குரிய குருபரம்பரையானது அவரவர்களுடைய வழிபடு தெய்வங்களிலிருந்தே தொடங்குகின்றது என்பதை அறிந்து கொள்கின்றோம்.

மேற்கண்ட சுலோகங்களில் தெய்வத்தையே குருவாகச் சொல்லி, அந்த தெய்வத்தினைத் தொடர்ந்து வரும் குருபரம்பரையையும் குறிப்பிடுவதன் மூலம் “குரு என்பவர் தெய்வத்துக்குச் சமமானவர்'' என்பதையும், “குருவும் தெய்வமும் வேறானவர்கள் அல்லர்” என்பதையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

“...பரமன் இராமாநுசன் எம் இறையவனே!” என்ற இராமாநுசநூற்றந்தாதிப் பாசுரத்தில் திருவரங்கத்தமுதனார் தம்முடைய ஆசாரியராகிய ஸ்ரீமத்ராமாநுஜரைப் “பரமன்” என்றும், “இறையவன்” என்றும் கூறுவதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் தம்முடைய குருவை தெய்வமாகவே நினைக்க வேண்டும் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

மேலும், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தம்முடைய ஸ்ரீராமாவதாரத்தில் வசிஷ்டரிடமும், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் சாந்தீபனி முனிவரிடமும் சிஷ்யராக இருந்து பல்வேறு சாஸ்திரங்களையும் கற்றுக் கொண்டார் என்பதன் மூலம், அவதார புருஷர்களுக்கும் குருவின் வழிகாட்டல் அவசியம் என்பதையும் நாம் தெரிந்து கொள்கின்றோம். ஆசாரியர் மணவாள மாமுனிகளும் “ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவே உடைய ஞான குருவை அடைந்தால்தானே பரமபதம் எளிதில் கிட்டும்” என்கின்றார்.

ஜீவாத்மாக்களாகிய நமது ஆன்ம நலத்தையே நாடும் குருமார்களின் தொடர்பானது பேரானந்தமாகிய முக்தி நிலைக்கு நம்மை உயர்த்துகின்றது.

“தெளிவு குருவின் திருமேனி காண்டல், தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல், தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே”

என்ற திருமூலரின் இனிய தமிழ்ப் பாசுரத்தை ஓதி நமது பாரத தேசத்தினைக் காலம் காலமாக அக்கறையுடன் வழிநடத்தி வரும் குருமார்கள் அனைவரையும் வணங்கி மகிழ்வோமாக!

# வேங்கடவனிடத்திலே பெரியாழ்வார் கொண்ட பொங்கும் பரிவு




ஆனி மாதம் உத்தராயண காலத்தின் கடைசி மாதம். ஆன்மீகச் சிறப்புமிக்க மாதம். பல மகான்கள் அவதாரம் செய்த மாதம். பற்பல கோயில்களிலே சிறப்பு அபிஷேக ஆராதனைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் மாதம்.

ஆனி மாதத்தில் தான் சாதுக்களின் சாதுர்மாஸ்ய விரதம் துவங்குகிறது. ஆனிப்பௌர்ணமியில் குரு பூர்ணிமா கொண்டாடப்படுகிறது. வியாச பூஜை நடக்கிறது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் ஆனி மாதத்தில் தான் ஜேஷ்ட அபிஷேகம் நடக்கிறது.

ஒரு மாதத்தில் பகவானின் அவதாரமும், ஆழ்வார்களின் அவதாரமும், ஆசாரியர்களின் அவதாரமும் இருந்தால் அந்த மாதத்திற்கு முப்புரி ஊட்டின மாதம் என்று வைணவத்தில் போற்றப்படுகிறது.

அந்த வகையில் ஆனி மாதத்தில் கூர்ம ஜெயந்தியும், ஆழ்வார்களில் பெரியாழ்வார் திருநட்சத்திரமும், ஆசாரியர்களில் ஸ்ரீமந்நாதமுனிகளின் திருநட்சத்திரமும் வருவதால் இந்த மாதம் பெருமை மிக்கதாக இருக்கிறது.

ஆழ்வார்களில் மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத பெருமை பெரியாழ்வாருக்கு உண்டு. காரணம் பெரியாழ்வார் என்பது அவருடைய இயற்பெயர் அல்ல. வில்லிபுத்தூர் பட்டர் பிரான் என்றும், விஷ்ணு சித்தன் என்றும் அவரை அழைப்பார்கள்.



பின் ஏன் அவர் பெரியாழ்வார் ஆனார்? அதிக பாசுரம் எழுதியவரும் அல்ல. காலத்தால் முந்தி அவதரித்தவரும் அல்ல. பின் ஏன் இந்தப் பெயர் வந்தது என்று சொன்னால், மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத பொங்கும் பரிவு இவரிடமே இயல்பாக குடி கொண்டு இருந்ததால் இவருக்கு பெரியாழ்வார் என்னும் பெயர்.

இதை மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில் மிக அற்புதமாக சாதிக்கிறார்.

*மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்*
*தங்கள் ஆர்வத்து அளவு தான் அன்றி-பொங்கும்*
*பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்றான்*
*பெரியாழ்வார் என்னும் பெயர்*



**- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963**

நமக்கு என்ன வருமோ என்று கவலையால் பெருமாளைச் சென்று பார்க்கிறவர்கள் உண்டு. குறைந்தபட்சம் அவனுடைய காட்சி வேண்டும். மோட்சம் வேண்டும் என்றெல்லாம் வேண்டுபவர்களும் உண்டு. ஆனால் பெரியாழ்வார், “பெருமாளே உனக்கு என்ன வருமோ?” என்று தாய்மை உள்ளத்தோடு இறைவனிடத்திலே பரிவு கொண்டு இருந்ததனால், அதுவும் இயல்பான பரிவாக இருந்ததால், அப்பரிவும் அளவு விஞ்சிப் பொங்கிப் பிரவகித்ததால் இவருக்கு பெரியாழ்வார் என்னும் பெயர் அமைந்தது.

மாமுனிகளின் இந்தப் பாசுரத்திற்கு உரை விளக்கம் அருளிச் செய்த பிள்ளை லோகம் ஜீயர் பொங்கும் பரிவு என்பதற்கு அற்புதமான விளக்கம் தருகின்றார்.

எம்பெருமானின் திருமேனியின் மென்மைத் தன்மை காரணமாகத் தன் நிலையை அழித்து வேறாகியும் அந்த எம்பெருமானுக்கு பெருமைகளை விரும்புகைதான் பொங்கும் பரிவு. எம்பெருமானுக்குப் பெருமையை விளைவிக்கும் தன்மை அன்றோ ஸ்வரூபம்.

**ஆடி மாதம் வரும் கார்த்திகை நாள் முருகப் பெருமானுக்கு உகந்ததாகப் போற்றப்படுகின்றது. ஆடிமாதம் தட்சிணாயனம் எனும் மழைக்காலத் தொடக்கமாகத் திகழ்வதால் இதில் செய்யப்படும் விழாக்கள் சிறப்புடையவை. இப்புண்ணிய காலத்தில் வரும் ஆடி கார்த்திகையில் விரதம் இருந்து முருகனை வழிபடுவது ஏராளமான வளங்களையும், நலன்களையும் தந்து மகிழ்ச்சியளிக்கும்.**

**ஆடி கார்த்திகை நாளில் சிவபெருமான் அருளால் முருகப்பெருமான் சூரனை அழிப்பதற்காகச் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக அவதரித்தார் என்பது வரலாறு. இதே நாளில் முருகன் கார்த்திகைப் பெண்களின் அரவணைப்பில் வளர்ந்தார் என்பதால் இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.**

**திருத்தணியில் ஆடிக் கிருத்திகை மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படும். ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு திருத்தணி திருக் கோயில் மற்றும் சரவணப் பொய்கையும் மின் விளக்குகளால் வண்ண மயமாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். மூன்று நாட்கள் தெப்போத்ஸவமும் நடைபெறும். இந்நாளில் முருகப் பெருமானை பக்தர்கள் விரதம் இருந்து சிறப்பு வழிபாடுகளையும் செய்திடுவர். மேலும் தம் இல்லங்களிலிருந்து பக்தர்கள் பல்வேறு வகைக் காவடிகளை தணிகை மலை வேலனுக்குக் காணிக்கையாகச் சுமந்து வந்து தம் நேர்த்திக் கடனைச் செலுத்துவர். பல பக்தர்கள் தம் இல்லங்களில் இருந்தே தணிகை வேலனைத் தரிசித்திட பாத யாத்திரையாகவும் வருவர். மேலும், எல்லா முருகனின் திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும். இந்நாளில் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், வேல் வகுப்பு, கந்தரனுபூதி, கந்தரலங்காரம் முதலிய நூல்களைப் பாராயணம் செய்வது சிறந்த பலன்களைத் தரும்.**

**பக்தர்கள் அனைவரும் இந்த ஆடிக் கிருத்திகை நாளில் முருகப் பெருமானை வழிபட்டுச் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.**




***-முனைவர்***
***ச.செந்திலாண்டவன்,***
***சென்னை.***

சேஷிக்கு அதிசயத்தை விளைவிக்கை சேஷ பூதனுக்கு ஸ்வரூப லாபமும் ப்ராப்யமும் (மு.மு.ப.177). மயர்வற மதிநலமருளப் பெற்றது முதலான சிறப்புகள் ஒத்திருந்தாலும் ஸ்வரூபத்துக்குத் தக்கதான மங்களா சாசனம் பண்ணுகையில் வந்தால் பெரியாழ்வார் விஷயத்தில் ஒரு படி மிகுதியாக அன்றோ இருப்பது.

"அபிநிவேசம் போவது அநுபவத்தாலே, ஸத்தா ஸம்ருத்திகள் தர்சநாநுபவ கைங்கர்யங்களாலே'' (ஸ்ரீவ.பூ.257) என்னும்படியன்றோ அவர்கள் (மற்ற ஆழ்வார்கள்) தங்கள் ஆர்வமிருப்பது. ஆகையால் அவர்களுக்கு அது எப்போதோ ஒரு சமயம் வருவதாய் இருப்பது அன்றோ, பெரியாழ்வாருக்கு எப்போதும் இருப்பது.

*''அன்பே பெருகும்''* (பெரி.தி.8) என்றும், *''என் தன் அளவன்றால் யானுடைய அன்பு''* (இ.திரு.100) என்றும், "உன்னிடத்தில் எனக்கு பிரியமே அதிகமாக உள்ளது" (2.40–16) என்றும் சொல்லுகிறபடியே பற்றின அளவன்றிக்கே கரை புரண்டு இவருடைய காதல் இருக்கும். இந்த உணர்வைத்தான் அமுதனார், *''சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும் பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள்''* (இ.நூ.15) என்று பாடுகிறார்.

பொங்கும் பரிவினால் பெரியாழ்வார் திருப் பல்லாண்டு பாடி முடித்தவுடன் கண்ணனுடைய பிள்ளைத் தமிழைப் பாடுகின்றார். பெரியாழ்வார் திருமொழியின் பெரும்பகுதி கண்ணனுடைய பிள்ளைத்தமிழ் தான். அதன் பிறகு பல திவ்ய தேசங் களைப் பாடுகின்றார். அவருடைய திருமொழியை நிறைவு செய்கின்ற பொழுது திருவேங்கடவன் இடத்தில் தான் வந்து நிற்கின்றார்.

அந்தத் திருவேங்கடவன் "உமக்கு நான் தென் திருமலை ஆகிய திருமாலிருஞ்சோலையிலே முக்தி அளிக்கிறோம். அங்கு சென்று தொண்டு செய்வீர்'' என்று கூற, அதை ஏற்றுக் கொண்டு தமது தள்ளாத வய தில் திருமாலிருஞ்சோலைப் பெருமானுக்கு தொண்டு செய்து, அவனுடைய திருவடி வாரத்திலேயே திருநாடு அலங்கரித்தார்.

இன்றும் திருமாலிருஞ்சோலையின் அடிவாரத் தில் அவருடைய திருவரசு அற்புதமாக அமைந்து இருக்கிறது. அவர் திருவேங்கடம் பற்றிப் பாடிய பாசுரங்களில் ஒன்றுதான் இந்தப் பாசுரம். கண்ணனுடைய பிள்ளைத்தமிழ் பாடுகின்ற பொழுது அந்தக் கண்ணன் தான் திருவேங்கடவன் என்று தன்னை யசோதையாகப் பாவித்துக் கொண்டு பாடிய பாசுரம் தான் இந்தப் பாசுரம்.

கண்ணன் விளையாட்டுப் பிள்ளையாக இருக்கின்றான். கவனம் எல்லாம் சிறுவர்களோடு சேர்ந்து பசு மாடுகளையும் கன்றுகளையும் காட்டுக்கு ஓட்டிச் சென்று மேய்ப்பதில் மட்டுமே இருக்கிறது.

பள்ளிக்கூடம் போகும் பிள்ளை சில புத்தகங் களையும், எழுதுகோலையும், மதிய உணவை யும், காலணிகளையும் விட்டு விட்டு நண்பர்கள் வந்து விட்டார்கள் என்று அவர்களோடு சேர்ந்து ஓடுவதிலேயே கவனம் செலுத்துவது போல கண்ணனும் தன்னோடு எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களை எல்லாம் கையில் எடுத்துச் செல்லாமல் ஓடுவதைப் பார்த்து யசோதை பதைபதைப்புடன் தாய்மை உள்ளத்தோடு பாடுவதாக அமைந்த பாசுரம் இது.

"ஐயோ இந்தக் குழந்தை காலில் செருப்பில் லாமல் காட்டிற்குப் போகிறதே. வெயில் காலமாக இருக்கிறதே. அவனுடைய மென்மையான திருவடிகள் வெயிலில் நோகுமே. கையில் புல்லாங்குழல் இல்லாமல் இருக்கின்றானே என்றெல்லாம் நினைத்து யசோதை பாவனையில் பாடுகின்ற பாசுரம் இந்தப் பாசுரம்.

*கடியார் பொழிலணி வேங்கடவா! கரும்*
*போரே றே! நீ யுகக்கும்*
*குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக்*
*கொள்ளாதே போனாய் மாலே*
*கடியவெங் கானிடைக் கன்றின்பின் போன*
*சிறுக்குட் டச்செங் கமல*
*அடியும் வெதும்பி உன் கண்கள் சிவந்தாய்*
*அசைந்திட் டாய்நீ எம்பிரான்.*

இனி அர்த்தத்தை ரசிப்போம்.

போர் கரு ஏறே என்று அழைக்கிறார். காளை கள் சண்டை செய்வதற்கும், பாய்ச்சலுக்கும் தயாராக இருக்கும். அந்த கம்பீரம் பெருமாளி டம் இருக்கிறது. நால்வகை நடை அழகில் வ்ருஷப கதி என்ற ஒரு நடை உண்டு. அவன் மால் – கன்றுகளிடத்தில் மோஹமுள்ளவன். திவத்திலும்

கன்றுகளை மேய்ப்பதில் ஆர்வமுள்ளவன். அவன் கண்ணன்... எந்தக் கண்ணன்? ''கடி ஆர் பொழில் அணி வேங்கடவா'' என்கிறார். (மலர்களின்) பரிமளம் நிறைந்த சோலை களையுடைய அழகிய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனே! என்று பொருள்.

“நீ யுகக்கும் குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே போனாய். மாலை கடிய வெங் கானிடைக் கன்றின்பின் போன சிறுக்குட் டச்செங் கமல அடியும் வெதும்பி உன் கண்கள் சிவந் தாய் அசைந்திட்டாய்” என்று வயிறு பிடிக்கிறார். பெரியாழ்வாரின் பொங்கும் பரிவு புலப்படும் வரிகள். “நீ விரும்பும் குடையையும் செருப்பும் வேய்ங்குழலையும் நான் உனக்குக் கொடுக்கச் செய்தேயும், (அவற்றை நீ) வாங்கிக் கொள்ளாமல் (கன்றுகளின் பின்னே) சென்றாய். மிகவும் வெப்ப மான காட்டிலே கன்றுகளின் பின்னே தொடர்ந்து சென்ற சிறு பிள்ளையாக உன்னுடைய செந் தாமரைப் பூப்போன்ற திருவடிகளும் கொதிக்கப் பெற்று உன் கண்களும் சிவக்கப் பெற்றாய்; (உடம்பு) இளைக்கவும் பெற்றாய் என்ற பாசுர வரிகளைப் பாருங்கள்.

யசோதை நிஜத்தில் இவ்வளவு பரிவுடன் இருந்திருப்பாளா என்பது தெரியவில்லை. ஆனால் யசோதையின் நிலையடைந்த பெரியாழ்வார் வேங்கடவனை கண்ணனாகப் பாவித்து பொங்கிய அன்பால் பிரவகிக்கிறார். அந்தப் பிரவாகம் தான் இந்தப் பாசுரமாக விரிகிறது.

# திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்

தி.தி.தேவஸ்தானத்தின் கடந்த வருட வரவு செலவு கணக்குகள் அனைத்தையும் பிரதான அதிகாரிகள் திருவேங்கடவனுக்கு சமர்ப்பிப்பர். அடுத்ததாக ஆரம்பமாகும் ஆண்டிற்கான கணக்கு புத்தகங்களையும் ஸ்வாமியின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து, புதுக் கணக்கினைத் துவங்குவர். இதனை ஆனிவர ஆஸ்தானம் என்றும், தமிழில் “ஆடி பூஜை” என்றும் கூறுவர்.

இந்நிகழ்வு கோயிலுக்குள் தங்க வாயில் அருகில் நடைபெறும். அன்றைய தினம் சுப்ரபாதம் மற்றும் தோமாலை சேவைகளுக்குப் பிறகு ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி சர்வ பூபால வாகனத்தில் கருடாழ்வார் சன்னதிக்கு எதிரிலுள்ள மணி மண்டபத்தில் எழுந்தருளுவார். திருமலையப்ப ஸ்வாமியின் அருகில் தெற்கு திருமுகமாக சேனாதிபதியான ஸ்ரீவிஸ்வக்சேனர் எழுந்தருள்வார். பின்பு அபிஷேகம், அர்ச்சனை செய்து, மூலமூர்த்திக்கு நைவேத்தியம் படைத்தபிறகு உற்சவ மூர்த்திகளுக்குப் படைக்கப்படும்.



நைவேத்தியத்திற்குப் பிறகு ஜீயர் ஸ்வாமிகள் செயலாட்சித் தலைவர், ஏகாங்கிகள், பேஷ்கர் மற்றும் திருக்கோயில் அதிகாரிகளோடு பட்டு வஸ்திரங்களை மூலமூர்த்திக்கும், உத்ஸவ மூர்த்திகளுக்கும் சமர்ப்பித்த பிறகு கொலுவு மற்றும் மங்கள ஆரத்தி காட்டி, இஞ்சி பொடி நைவேத்தியமாகச் சமர்ப்பிப்பர்.

இந்த ஆனிவர ஆஸ்தான சேவையின்போது செயலாட்சித்தலைவர், இணை செயலாட்சித் தலைவர்கள், துணை அதிகாரிகள், ஜீயர் ஸ்வாமிகள் ஏகாங்கிகள், பொறுப்பாண்மைக் குழுவினர் முதலானவர்களுக்கு மரியாதை செய்யப்படும். கோயில் சாவிகள் ஸ்வாமியிடம் சமர்ப் பித்து பூஜை செய்து தர்மாதிகாரியிடம் தரப்படும்.

அன்று மாலை ஸ்ரீதேவி, பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி புஷ்ப பல்லக்கில் நான்கு மாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.



# ஸ்ரீஆண்டாள் பாசுரங்களில் பறவைகள்

– திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி,
9443879592

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனின் திருவுள்ளக் கருத்தினை அடியொற்றி ஸ்ரீபூமிப் பிராட்டியானவள் ஸ்ரீவில்லிபுத்தூரில் தூய துளசி மாடத்திற்கு அருகில் நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறை சதுர்த்தசி திதியில் செவ்வாய்க்கிழமை பூரம் திருநட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தாள். வடபத்ரசாயியான எம்பெருமானுக்கு புஷ்பமாலை கைங்கர்யம் செய்து வரும் சுவாமி பெரியாழ்வார் திருக்கைகளில் தவழப்பெற்று, கோதை என திருநாமமிடப் பெற்றாள்.

வளர்ப்புத் தந்தையாரான பெரியாழ்வாரினையே ஆசாரியனாக வரித்து, ஸ்ரீவைஷ்ணவ சரணாகத தத்துவத்தினை குழந்தைப் பருவத்திலேயே கிரஹித்து, ஸ்ரீமந்நாராயணனையே தம்முடைய மணாளனாக அடையப் பெற வேண்டுமென்ற பக்திப் பெருக்கினை உடையவளாக எம்பெருமான் மீது ஆறாத காதல் கொண்டவளானாள்.

பெரியாழ்வார் எம்பெருமானுக்குத் தொடுத்த மாலைகளை தாம் அணிந்து கொண்டு அழகு பார்த்து தாம் சூடிக் களைந்த மாலைகளை வடபெருங் கோயிலுடையான் மிகவும் உகப்புடனே சூடிக் கொள்ளும்படியான பெரும் பேறு பெற்றவளானாள்.

### திருப்பாவை

ஸ்ரீவில்லிபுத்தூரினை ஆயர்பாடியாகவும், அங்குள்ளப் பெண்பிள்ளைகளை ஆயர்குலப் பெண்களாகவும் வரித்து மார்கழி மாதத்தில் பாவை நோன்பு நோக்கும் பொருட்டு அவர்களை விடியற் காலையில் துயில் எழுப்பி நீராட்டம் கொள்வித்து கண்ணபிரானைத் தொழுது துதிக்கும் பொருட்டு திருப்பாவை பாசுரங்களை அருளுகையில் பொழுது புலர்ந்ததின் அறிகுறியாக பறவைகள் சத்தமிடுவதையும் பாடுவதையும் ஆண்டாள் அடையாளமாக திருப்பாவைப் பாசுரங்களில் குறிப்பிடுவதை அனுபவிக்கலாம்.

### புள்ளும் சிலம்பினகான்:

*புள்ளும் சிலம்பினகான் புள்ளரையன் கோயில்*
*வெள்ளை விளிசங்கின் பேரரவம்*
*கேட்டிலையோ? பிள்ளாய் எழுந்திராய்*

– திருப்பாவை 6

அதிகாலை வேளையில் மரங்களில் வாழும் பறவைகள் கண் விழித்து, சிறகுகளை விரித்து அலகினால் கோதிக்கோதி மெல்லிய சப்தங்களை எழுப்பிக்கொண்டு இரைதேடிப் பறப்பதற்கு

தயார்நிலையில் உள்ளன. கருடப்பறவையினை வாகனமாகக் கொண்ட எம்பெருமான் கோயிலில் வெண்மையான சங்கினை இசைக்கும்பெருத்த நாதம் ஒலிக்கிறது. முனிவர்களும் யோகிகளும் திருக்கோயில் நோக்கிச் செல்லும்போது பாடும் ஹரி ஹரி எனும் திருநாம சங்கீர்த்தனம் பெண்ணே உன்னுடைய உள்ளத்தில் புக மகிழ்ச்சியோடு எழுந்து அடியோங்களுடன் நீராட வருவாயாக என ஆண்டாள் அருளுகிறாள்.

**ஆணைச்சாத்தன்**

*கீசு கீசென்றெங்கும் ஆணைச்சாத்தன் கலந்து*
*பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்*
*பெண்ணே*

– திருப்பாவை –7

பொழுது புலர்ந்தவுடன் ஆங்காங்கே மரங்களில் ஆனைச்சாத்தன் குருவிகள் ஒன்றோடு ஒன்று கலந்து மாறி மாறி கீசு கீசு என்று பேசும் ஒலி கேட்கிறது. அது கிருஷ்ணா கிருஷ்ணா என எம்பெருமானைக் குறித்து நாம சங்கீர்த்தனம் செய்வதுபோல் இருக்கின்றது. ஆய்ச்சியர்கள் தங்கள் இல்லங்களிலே தயிர் கடையும் அனைத்து ஒலிகளும் ஒன்றிணைந்து பேரரவமாக ஆயர்பாடி முழுதும் ஒலிக்கின்றது. ஆய்ச்சியர்கள் தயிர் கடையும்போது அவர்கள் அணிந்துள்ள அச்சுத் தாலியும் ஆமைத்தாலியும் ஒன்றோடொன்று உரசும் ஒலியும் சேர்ந்துள்ளது. எனவே பாவை நோன்பிற்கு காலம் தாழ்த்தாமல் எழுந்து வர வேண்டும் என ஆண்டாள் அழைக்கிறாள்.

**கோழி**

*கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்*
*வந்தெங்கும் கோழி அழைத்தன காண்மாதவிப்*
*பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின*
*காண்*

– திருப்பாவை – 18

ஆண்டாள் ஆயர்குலப் பெண்களுடன் நந்த கோபன் திருமாளிகையினை அடைகிறாள். கண்ணன் துயிலணைமேல் நப்பின்னையின் அணைப்பிலே கண் வளர்த்திருக்கிறான். ஆண்டாள் நப்பின்னையினை நோக்கி "நறுமணம் வீசும் குழல் களையுடைய நப்பின்னையே விடியற்காலையினை உணர்த்தும் விதமாக கோழிகள் ஆங்காங்கே கூவிக் கொண்டிருக்கின்றன. மாதவிப் பந்தல்கள் மேல் உள்ள குயில்களும் தொடர்ந்து இனிய குரலில் பாடுகின்றன. நந்தகோபனின் மருமகளே நீயுன் மணாளனான கண்ணனை துயிலெழுப்பி உன்னுடைய கைகளில் உள்ள வளையல்கள் இனிய ஓசையினை எழுப்பும் விதமாக வந்து கதவினைத் திறந்து கண்ணன் தரிசனம் எங்களுக்கு தருவதற்கு உதவ வேண்டும் என வேண்டுகிறாள் ஆண்டாள்.

ஆண்டாள் "நாச்சியார் திருமொழியில்" பறவைகளை எம்பெருமானிடம் தூது அனுப்புவதை யும் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் எனும் உறுதிப் பாட்டினையும் அருளுகின்றாள்.

**குயில்**

*கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்*
*களித்திசை பாடும் குயிலே*
*மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்*
*வேங்கடவன் வரக்கூவாய்...*

– நாச்.தி.5–2

திருவேங்கடமலையிலே சேவை சாதிக்கும் எம்பெருமான் ஆண்டாளுக்கு நேரிலே வந்து அருளாமல் போக்குக் காட்டுகின்றான். வேங்கடவனின் திவ்ய மங்கலத் திருமேனியின் எழில் ஆண்டாளின் உள்ளத்திலே தங்கி அவளின் உயிரினை வதைத்துக் கொல்லுமாறு வேடிக்கை செய்து விளையாடுகிறான். தேன் நிறைந்து வழியும் செண்பக மலரின் இதழ்களை அலகினால் கோதிக் கோதி அதன் வடிவழகிலே மதி மயங்கி ஆனந்தமாய் இன்னிசை பாடும் குயிலினை நோக்கி "குயிலே உன்னுடைய மழலைக் குரலால் என்னிடம் வந்து உன்னுடைய செண்பக மலர் அனுபவத்தினை பேசுவதை விடுத்து திருவேங்கடவன் என்னுடைய காதலினை உணர்ந்து என்னருகே வெகுசீக்கிரம் வருமாறு கூவ வேண்டும்" என்கிறாள் ஆண்டாள்.

*பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல்?*
*நல்வேங்கட*
*நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து*
*பாடுமின்...*

– நாச்.தி.10–5

திருவேங்கடவனைக் கலந்து அனுபவிக்க முடியாத பசலை நோயினால் துன்புற்றிருக்கும் ஆண்டாளுக்கு மிகவும் இனிமையாகப் பாடும்



## எண்ணுவது உயர்வு

**புதிய ஆத்திசூடி 7**

"எண்ணிய முடிதல் வேண்டும், நல்லதே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்பார் மகாகவி பாரதியார். எண்ணுவது என்றால் சிந்திப்பது. மனம் தூய்மையாக இருந்தால் அறிவு தெளிவாக இருக்கும். சிந்தனை தெளிவாக இருந்தால் நம் எண்ணங்கள் உயர்வாக இருக்கும். எண்ணங்கள் உயர்வாக இருக்கும் போது அவை எப்போதும் நன்மையாகவே முடியும். எல்லாச் செயல்களையும் நம்பிக்கையோடு செய்ய வேண்டும். நல்ல சிந்தனை உயர்வைக் கொடுத்து, நம்பிக்கையை வளர்த்து, தெளிவைக் கொடுத்து, நமக்கு முடிவில் வெற்றியைக் கொடுக்கும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்று இதைத்தான் திருக்குறள் எடுத்துச் சொல்கிறது. இவ்வாறு நாம் வெற்றி பெற அடிப்படை எதுவென்று கேட்டால் 'கல்வி' தான். எதைச் செய்தாலும் உயர்வாக சிந்தித்து திட்டமிட்டு, நேரம் பார்த்து, இடம் பார்த்து, பொருள் பார்த்து, இறை நம்பிக்கையோடு செய்தால் வெற்றி நமதே குழந்தைகளே!

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

குயிலின் ஓசை கொடூரமாகத் தெரியவே "குயில்களே என்னருகே வந்து நீங்கள் பாடுகின்றது கொடூரமான கூச்சலாக ஒலிக்கிறது. திருவேங்கடவன் என்னை நாடி வந்து ஆனந்த வாழ்வு அளிக்கும்போது நீங்கள் பாடலாம்.

திருவேங்கடவன் திருக்கோயிலில் கருடக் கொடி பறக்க அடியார்களுக்கு அருள் செய்யும் திருவேங்கடநாதன் என்னோடு கூடிக் கலந்து இன்புறும்போது உங்களைக் கூவி அழைத்து அகம் குளிர உங்களுடைய பாடல்களைக் கேட்டு பேரானந்தம் கொள்வேன்" என்கிறாள் ஆண்டாள்.

### மயில்

*கணமா மயில்காள் கண்ணபிரான் திருக்*
*கோலம் போன்று*
*அணிமா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு*
*அடிவீழ்கின்றேன்...*

– நாச்.தி.10–6

அழகாக படமெடுத்த ஆதிசேஷன் படுக்கையிலே திருக்கண் வளர்ந்தருளும் அழகிய மணவாளனான எம்பெருமான் அவனையே நினைத்து ஏங்கி இருக்கும் ஆண்டாளைக் கலந்து கூடாமல் பிரிவாற்றாமைத் துயரினையே அவளுக்குப் பரிசாக அருளிச் செய்துள்ளான். கண்ணபிரானின் அழகிய திருமேனியின் வண்ணத்தைக் கொண்டு கூட்டமாக வந்து மிகவும் ஆனந்தமாக நடனமாடும் மயில்கள் அவளின் வருத்தத்தினை அதிகரிக்கச் செய்ததினால் மயில்கள் நடனத்தினை நிறுத்தினால் அவைகளின் திருவடிகளிலே வீழ்ந்து நமஸ்காரம் செய்வதாக வேண்டுகிறாள் ஆண்டாள்.

### அன்னம்

*செங்கமல நாண் மலர் மேல் தேனுகரும்*
*அன்னண் போல்*
*செங்கட் கருமேனிவாசுதேவனுடைய...*

– நாச்.தி.7.7

அதிகாலைப் பொழுதில் பகலவன் ஒளிக்கதிர் பட்டு மலரும் செந்தாமரைப் பூவில் இருக்கும் தேனினை உண்கின்ற அன்னப்பறவையினைப் போன்று கருத்தத் திருமேனியில் அழகிய சிவந்த கண்களை உடைய வாசுதேவன் திருக்கைகளில் குடி கொண்டு கண் வளரும் பாஞ்சஜந்யம் பெற்றுள்ள செல்வமே ஏனையோர் அடைந்துள்ள செல்வங்களைக் காட்டிலும் அழகிய செல்வமாகும். செந்தாமரையின் தேனினை அன்னம் பருகுவது போன்று சங்கினை திருவாயில் வைக்கும்போது எம்பெருமான் இதழமுதத்தைப் பருகும் பாக்யம் பெற்றதான சங்கின் போக்யத்வத்தை எண்ணி கண்ணபிரானின் தேவிமார்களும் பொறாமை கொள்வர் எனவும் ஆண்டாள் பாசுரமிடுகிறாள்.

**கிளி**

*கூட்டிலிருந்து கிளியெப்போதும் கோவிந்தா!*
*கோவிந்தா! என்றழைக்கும்*
*ஊட்டுக்கொடாது செறுப்பனாகில்*
*உலகளந்தான் என்று உயரக்கூவும்...*

– நாச்.தி.12–9

ஆண்டாள் எம்பெருமானைப் பிரிந்து பசலை நோயினால் உடலும் மனமும் சோர்ந்து வாடியிருக்கிறாள். ஆண்டாள் திருமாளிகையில் கூட்டில் உள்ள கிளியானது ஆண்டாளின் வருத்தம் தீரும் விதமாக அவள் ஆனந்தமாக உள்ள போது சொல்லிப் பழக வைத்த எம்பெருமானின் திருநாமமான “கோவிந்தா... கோவிந்தா...” என்று ஆண்டாளை நோக்கி அழைத்தது. தற்போது எம்பெருமானைக் காணாத வருத்தத்தினால் கோபமுற்ற ஆண்டாள் அக்கிளிக்கு உணவு வழங்கவில்லை.

உடனே அக்கிளியானது “உலகளந்தான்.. உலகளந்தான்...” என்று பெருத்தக் குரலெடுத்து கத்தியது. ஆகையால் பெருத்த பழியைப் பெற்று நல்ல பெயரினைக் கெடுத்துக் கொண்டு தலைகவிழ்ந்து நிற்க வேண்டாதபடிக்கு உயர்ந்த மாடங்களால் சூழப்பட்ட கண்ணபிரான் உறையும் துவராபதிக்கு உடனே அழைத்துச் சென்று கண்ணபிரானிடம் தம்மைச் சேர்க்குமாறு உறவினர்களுக்கு உணர்த்துகிறாள் ஆண்டாள்.

**கருடன்**

*மேலால் பரந்த வெயில் காப்பான் வினதை*
*சிறுவன் சிறகென்னும்*
*மேலாப்பின்கீழ் வருவானை விருந்தா*
*வனத்தே கண்டோமே...”*

– நாச்.தி.14–3

அனைவரும் மோகம் கொள்ளும்படியான திருமேனியோடு அவதரித்தவனும், பார்த்த அனைவரையும் மோஹம் கொள்ளும்விதமான சேஷ்டைகளைச் செய்பவனுமான கண்ணபிரான் வினதையின் மகனான கருடப் பறவையின் மேல் ஆரோகணித்து எம்பெருமான் மீது வெயில் படாவண்ணம் அக்கருடன் தன் சிறகுகளாலே நிழல் தர தம்மை நோக்கி வந்து பிருந்தாவனத்தில் அருள் கொடுத்ததை மிகவும் ஆனந்தமாக உரைக்கிறாள் ஆண்டாள்.

ஆண்டாள் நாச்சியாரின் ஆழ்ந்த பக்தியினையும் காதலினையும் உணர்ந்த பெரியாழ்வார் அவளை திருவரங்கனுக்கு மணம் செய்விக்கும் பொருட்டு சகல சீர்வரிசைகளுடன் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே திருவரங்க நாதனைக் கண்ட ஆண்டாள் பக்தி வெள்ளமிட அரங்கன் கருவறைக்குச் சென்று *‘‘மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து கைப்பிடித்தான்...’’* எனும்படியாக அரங்கன் திருவடிகளில் சரணபுகுந்து ஐக்கியமானாள்.

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்

*ராமாநுஜார்யோऽபி புரம் க$_3$மிஷ்யந் ரங்க$_3$ம் தத:*
*ஸ்ரீமது$_4$ராந்தகஸ்த$_2$ம் ।*
*ஸ்ரீபூ$_4$மிநீளாதி$_3$யுதம் தடாகபாலம் ஸிஷேவே*
*ரகு$_4$நந்த$_3$நம் தம்॥*

(42)





இராமாநுஜரும் பெரிய நம்பியை ஆச்ரயிப்பதற்காக ஸ்ரீரங்கத்திற்குச் செல்கின்றவராய், வழியில் மதுராந்தகத்திலே ஸ்ரீபூமிநீளாதேவிகளோடு கூடிய கருணாகரனையும், சீதையோடு கூடிய ஏரிகாத்த இராமபிரானையும் சேவித்தார்.

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**விரிவுரை :**

ஓ! விருஷமலை இறைவனே! மமகாரத்தால் எனக்கு எந்தெந்த கபடத்தன்மை உண்டாகின்றனவோ அவற்றை எல்லாம் போக்குவாயாக. மங்களகரமான எண்ணங்களை அருள்வாயாக. நீ ஸத்புருஷர்களுடைய மேன்மைக்கே சிரமப்படுவாய்.

சத்ரு நிரஸனத்தில் எந்த ச்ரமமும் உனக்கு இல்லை. இங்கு ஆயாஸம் என்பது அவதார ரூபமான முயற்சியே ஆகும். இந்த அவதார முயற்சி எல்லாம் ஸாது பரித்ராணமேயாம் (நல்லவர்களைக் காப்பதேயாம்). துஷ்டர்களை அழிப்பதாவது ஸங்கல்ப மாத்ரமே ஆகும். இந்த விஷயத்தைப் பற்றிப் "பரித்ராணாய ஸாதூநாம்" என்ற கீதை சுலோகத்திற்கு எம்பெருமானார் போன்ற பூர்வாசாரியர்கள் வியாக்கியானங்களில் விவரித்து உள்ளனர். அப்படியிருக்கும் போது என்னுடைய நன்மைக்காக நீ ஏன் சிரமம் கொள்ளவில்லை? என்னுடைய சத்ரு ஜயத்துக்கே சிரமம் மேற்கொண்டால் உன்னுடைய கருணைக்கு நான் எப்படி இலக்காகவில்லை? தெரிவிப்பாயாக. என்னுடைய பிரபுவே!



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

*- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,*
*திருப்பதி, 99855 99669.*

சேஷசயனா! என்னுடைய விருப்பமான சத்ரு அபஜயத்துக்கு அருள் புரிவாயாக. ஓ! பரம்பொருளே! என்னிடம் உனக்கிருக்கும் தயை அளவற்றதாக ஆக வேண்டும். ஓ! மாதவா! எளிமை குணமுடையவனே! என்னால் உன்னுடைய பெருமைக்கு குறையொன்றும் இல்லாததாகுக.

இந்த சுலோகத்தில் கவி பிரார்த்தித்த சத்ரு (பகை) ஆறு வர்க்கங்களாம். அதாவது காமம், க்ரோதம், மதம், மாச்சர்யம், கோபம், பொறாமை என்பனவாம். அது மட்டுமில்லாமல் அநாத்மஜ்யாத்ம புத்தி, அந்வே ஸ்வமிதி மத முதலியனவற்றையும் சொல்லலாம். அதாவது ஆத்மபுத்தி என்பது தேஹம் வேறு ஆத்மா வேறு என்ற எண்ணம் "ஸத்புத்தி; அநாத்ம புத்தி;" என்பது அதற்கு எதிர்த்தட்டாயிருப்பதாகும்.

*க$_4$டித பாபாபாரது$_3$ர்படபடல துர்கட நித$_4$நகாரண*
*ரணத$_4$ராராராத்பலாயந நிஜநிதர்சித ப$_3$ஹுப$_3$லாயந*
*த$_3$ரவராராராவநாசநமது$_4$விநாசந மம மநோத$_4$ந*
*ரிபுலயாயாயாஹிபாஹி ந இத$_3$மாம் மம கல பாவந|*
*ஸுதரஸாஸாஸாரத்$_3$ருக்திரதி சுபா$_4$ தவநிபததாஸ்மயி*
*ஸுஹரமோமோமோத்துஸந்ததமயிப$_4$வாந்மயிவ்ருஷகி$_3$ராவபி*
*ப்ரதிதி$_3$நம் நம் நம் நம்யதே மம மந உபேக்ஷிததத$_3$பரம்த்வயி*
*தத$_3$ரிபாபாபபாஸநம் குருவ்ருஷகி$_3$ ரீச்வரஸததமுஜ்ஜ்வல||*

*இன்னும் ஜ்வலிக்கும்...*



# ஆசார்ய மஹிமை

– திரு. ஆர். கண்ணன், பெங்களூரு,
93435 83416

நாம் குரு மற்றும் ஆசார்யர் என்னும் சொற்களைக் கேட்கிறோம். குரு–"கு" என்றும், "ரு" என்றும் இரண்டு எழுத்துக்கள் கொண்டது. "கு" என்பதற்கு அந்தகாரம். அதாவது அஜ்ஞாதம் (அறிவில் குறைவு) என்றும், "ரு" என்பதற்கு அதை நீக்குதல் என்றும் பொருள். ஆகவே குரு என்பவர் அறிவின்மையைப் போக்குபவர் என்று பெரியோர்கள் கூறுவர்.

ஆசார்யர் என்பவர் சாஸ்த்ரங்களை நன்கு ஆராய்பவர். ஆசாரங்களை நன் நடத்தையை – ஸ்தாபிப்பவர் மற்றும் தானும் அதனை முற்றிலும் கடைபிடிப்பவர். ஆகவே ஆசார்யர் சாஸ்த்ரங்களை நன்கு ஆராய்ந்து, அவைகளிலுள்ள சிறந்த விஷயங்களை நிலை நிறுத்தி, தானும் முழுவதுமாகப் பின்பற்றுபவர். இருள் தருமா ஞாலமாகிய இந்த ஸம்ஸாரத்தினின்றும் அந்தமில் பேரின்பம் ஆகிய மோக்ஷத்தை அடியவர்களுக்கு அடைவிப்பதில் வல்லவர்கள் ஸதாசார்யர்கள் எனப்படுவர்.

ஸதாசார்யருக்குள்ள முக்கியமான நற்குணங்களை சுவாமி தேசிகன் தன்னுடைய ந்யாஸ விம்சதி என்னும் ஸ்தோத்ரத்தில் அற்புதமாக அருளிச் செய்கிறார்.

அவர் நல்ல ஆசார்ய பரம்பரையில் கற்றுத் தேர்ந்தவர். அவருடைய புத்தி ஸஞ்சலமற்றது. வேறு விஷயங்களில் பட்டிமேயாது. எவ்வித குறையும் அற்றவர். வேதாந்த சாஸ்த்ரங்களை கசடறக் கற்று அதன் பொருளாகிய ப்ரஹ்மத்திடம் நிலையாக நிற்பவர். ஸத்வ குணம் நிறைந்தவர். ஸத்யவாதி அதாவது எப்போதும் உண்மையையே பேசுபவர். காலத்துக்கேற்ற பெரியோர்கள் சம்மதிக்கும் ஒழுக்கமுடையவர்; தற்பெருமை, பொறாமை முதலிய கெட்ட குணங்கள் அற்றவர். சிறந்த புலன் அடக்கம் உடையவர்.

பிறருக்கு உதவி செய்வதில் நோக்குடையவர். அதாவது கருணையே வடிவெடுத்தவர். சிஷ்யர்கள் தவறு செய்யும்போதுத் திருத்திப் பணிகொள்பவர். பிறர் நலத்தையே எப்போதும் நாடுபவர் – போன்றவை.

ஒரு நல்ல சிற்பி தகுந்த கல்லைத் தேர்ந்தெடுத்து, கற்றுளியினால் தன் திறமையுடன் ஓர் சிலையை வடிவமைக்கிறான். அதுவே பிறகு ப்ராணப் பிரதிஷ்டைச் செய்யப்பட்டு (உயிரூட்டப்பட்டு), திருக்கோயில்களில் ஸ்தாபிக்கப்பட்டு எல்லோரும் வணங்கி வழிபட உரியதாகிறது. அது போல, ஒரு ஸதாசார்யர், ஆன்மீகத்தில் ஊற்றம் உடைய சிஷ்யர்களுக்கு, தத்வ ஹித புருஷார்த்தங்களை நன்கு கற்றுவித்து, உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தை அடையும் மார்க்கமான சரணாகதி தத்துவத்தை உணர்த்தி, அநுஷ்டிக்கவும் செய்து அவனுடைய உஜ்ஜீவனத்துக்கு வழி வகுக்கிறார். உரிய காலத்தில் சரணாகதி செய்த அந்த ஜீவனும்

மோக்ஷத்தை அடைந்து அந்தமில் பேரின்பத்தை அடைகிறான். இப்பேற்பட்டதைச் செய்யும் ஆசார்யரின் உபகாரத்தை அளப்பார் யார்?

வேதமானது மாதா பிதாக்களைத் தெய்வமாக வழிபடச் சொல்லி, ஆசார்யரையும் தெய்வமாகப் போற்றுமாறு நியமிக்கிறது (மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ). ஆகவே நாம் ஸதாசார்யர்களை கடவுளாகவே எண்ண வேண்டும்.


இதனை சுவாமி தேசிகன் அற்புதமாக நியாய விம்சதியில் அருளிச் செய்கிறார். நம்முடைய அக இருளைக் கடிவதாலும், நம் பாபங்களை விலக்குவதாலும், சிஷ்யர்களைத் தன்னைப் போல் ஆக்குவதாலும், உதார குணத்தாலும், உயர்ந்த ஞானத்தால் பெருமையை அடைவிப்பதாலும், குளிர கடாக்ஷிப்பதாலும், தங்கு தடையின்றி கருணை மழை பொழிவதாலும், அண்ணிக்கும் அமுதூட்டுவதாலும், என்றைக்கும் எப்போதும் ஸ்வாமியாயிருப்பதாலும், ஆசார்யரை சிஷ்யன் ஒரு கைம்மாறு கருதாமல் கடவுளைப் போல வழிபட வேண்டும்.

ஆசார்யர் செய்யும் அந்தமிலாப் பேருதவிக்கு, சிஷ்யன் எந்தக் கைம்மாறும் செய்ய முடியாது. இதனையும் ஸ்வாமி தேசிகன் தன்னுடைய அதிகார ஸங்க்ரஹத்தில் அற்புதமாக அருளிச் செய்கிறார்.

*''ஏற்றி மனத்து எழின் ஞானவிளக்கை இருளனைத்து*
*மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்*
*போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்*
*சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே''*

நம்முடைய மனதிலே ஞான விளக்கை ஏற்றி, அஞ்ஞானம் ஆகிற இருட்டை ஒழித்தவர்கள் ஆசார்யர்கள். அவர்கள் விஷயத்தில் ஒரு கைம்மாறை எல்லாம் அறிந்த எம்பெருமானும் காணகில்லான். ஆதலின் ஆசார்யரைப் புகழ்ந்து மகிழ்வதும், மனதில் தியானம் செய்வதும், அவருடைய நிறைந்த கீர்த்தியைப் பறை சாற்றி வளர்ப்பதுவும் நாம் ஆசார்யரிடமிருந்து முன்பு பெற்ற உபகாரத்திற்கு மிகவும் சிறிதன்றோ!

நாம் குருவை (ஆசார்யரை) ப்ரகாசப்படுத்த வேண்டும். மந்திரத்தை முயன்று அதிகாரமற்றவர்களிடமிருந்து மந்திரத்தை ரக்ஷிக்காவிட்டாலும் ஞானமாகிற செல்வமும் மந்திர நிஷ்டையும் குறையும் என்று சேஷ ஸம்ஹிதை உறுதியாகக் கூறுகிறது. ஸர்வஜ்ஞனான கண்ணபிரானும் தானும் ஸாந்தீபினி மகரிஷியிடம் குருகுல வாஸம் செய்து அனைத்துக் கலைகளையும் கற்றான் என்று புராணங்கள் கூறும்.



ஆசார்யர்களுக்கும், அவர்களின் ஆசார்யர்களுக்கும் வந்தனம் சொல்லி ஓதுகின்றோம். ஆசார்ய பரம்பரையில் முதல்வர்களாய் உலகங்களுக்கெல்லாம் ஸ்வாமியான பிராட்டி – எம்பெருமான் இருவரையும் உபாயமாகவும், பலமாகவும் வரிக்கின்றோம் – என்பது இதன் சுருக்கமான பொருள் ஆகும்.

சுவாமி தேசிகன் ஆசார்யர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு, குருபராம்பரா ஸாரம் என்ற நூலை அருளிச் செய்துள்ளார். அதில் தாம் எம்பெருமான் திருவடிகளை அடைவதன் பொருட்டு, குருபரம்பரையை அற்புதமாக அருளிச் செய்கிறார்.

க்ரிமிகண்ட சோழன் சபையில், எம்பெருமானாரான ஸ்ரீராமாநுஜரை ரக்ஷிக்கும் பொருட்டு, தன் கண்களை, ஆசார்யருக்காகத் தியாகம் செய்த சிஷ்ய ச்ரேஷ்டரான கூரத்தாழ்வானும், சிஷ்யனை ரக்ஷிக்கும் பொருட்டு தியாகம் செய்த பெரிய நம்பிகளின் அற்புத செயல்கள் ஆசார்யரின் பெருமைகளைப் பறை சாற்றும். ஆசார்யர்களே நமக்கு இங்கும் அங்கும் (பரமபதத்திலும்) தஞ்சம்.

பகவான் ரக்ஷிப்பான் என்று திடமனதுடன் அவன் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்த ஆசாரியர்களில் ஒருவர் திருக்கண்ணமங்கை ஆண்டான். பகவான் கைங்கர்யத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்று பகவானின் கைங்கர்யம் மட்டுமே செய்து வந்தவர். அவர் ஸ்வாமி தாசன் என்று எண்ணி அந்த பக்தவத்ஸல்யனிடம் ஆறாத பக்தி கொண்டு வாழ்ந்தவர். திருக்கண்ண மங்கையிலேயே பிறந்து அந்தத் தலத்திலேயே பரமபதம் அடைந்தவர் கண்ணமங்கை ஆண்டான்.

ஆனி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் திருக்கண்ண மங்கை என்னும் திவ்ய தேசத்தில் அவதரித்தவர். ஸ்ரீகிருஷ்ண லக்ஷ்மி நாதாசார்யர் என்ற இயற்பெயர் கொண்டவர். ஸ்ரீமந்நாத முனிகளின் எட்டு சீடர்களில் ஒருவர். பிள்ளை லோகாசார்யர் அருளிய ஸ்ரீவசன பூஷணம் என்னும் நூலில் மூன்றாம் பிரகணத்தில் (சூ.80) ஆண்டானிடம் அன்பு கொண்டு “உபாயத்துக்கு (கைங்கர்யம்) திருக்கண்ணமங்கை ஆண்டானைப் போல இருக்க வேணும்” என்று போற்றுகிறார். நாச்சியார் திருமொழிக்கு *‘‘அல்லி நாள் தாமரை மேல்’’* என்று தொடங்கும் தனியனை எழுதினார் திருக்கண்ண மங்கை ஆண்டான்.


ஒரு நாள் கோயில் வாசலில் ஒரு நாயை ஒருவன் அடித்தான். இதைப் பார்த்த அந்த நாயின் சொந்தக் காரர் மிகவும் கோபமடைந்து அதை அடித்தவனிடம் சண்டையிட்டார். கத்தியை எடுத்து ஒருவரையொரு வர் கொல்லவும் தயாரானார்கள். இதைப் பார்த்தவுடன் மிகச் சிறந்ததோர் எண்ணம் ஆண்டா னுக்கு உதயமானது.

ஒரு சாதாரண மனிதன் தனக்குச் சொந்தமான ஒரு நாயை அடித்ததற்காக கோபப்பட்டு, கேவலம் அந்தவஸ்து தனக்குச் சொந்தமானது என்பதற்காக அடித்தவரைக் கொல்ல வேண்டும் என்ற அளவுக்கு செல்வானேயானால், ஒருவன் “ஸர்வரக்ஷகனான எம்பெருமானிடம் நாம் சரணாகதி பண்ணிவிட்டு அவனே நம்மை காப்பாற்றுவான் என்றிருந்தால் தேவர்க்கெல்லாம் தேவனான ஸ்ரீமந்நாராயணன் நம்மை ரக்ஷியாதிருப்பானோ?” என்று அவர் சிந்தித்தார். உடனே தான் அனைவர் மீதும் வைத்திருந்த பற்றைவிட்டு எந்த எண்ணமும் கவலையும் இல்லாமல் கோயிலுக்குள் சென்று அங்கேயே தங்கி தனக்காக ஒன்றும் செய்து கொள்ளாமல் பெருமாள் கைங்கர்யம் மட்டுமே செய்து கொண்டு வாழ்ந்து வந்தார்.

# உலகாரியனார் போற்றிய திருக்கண்ணமங்கை ஆண்டான்







நம்மாழ்வார் தன் திருவாய்மொழி 9–2–1ல்

*"பண்டைநாளாலே நின்திரு அருளும்*
*பங்கயத்தாள் திருவருளும்*
*கொண்டுநின் கோயில் சீய்த்துப்பல்படிகால்"*

அதாவது, திருக்கண்ண மங்கையாண்டான் ஒரு மகிழ மரத்தின் கீழ் இருந்த சருகுகளை அகற்றத் திருவலகிட்டார். அதைப் பார்த்த நாத்திகன் ஒருவன், "பகவானே உபாயம் என்று கூறுகிற நீங்கள் இப்போது படும் சிரமத்திற்குப் பயன் யாது? இவ்வாறு திருவலகிடும் கைங்கர் யம் எதற்காகச் செய்கிறீர்கள்?" என்று கேட்டான். பெருக்கிச் சுத்தம் செய்த இடத்தையும், தூய்மை அற்ற இடத்தையும் சுட்டிக் காட்டி "இது தான் பயன்" என்றாராம். அதாவது கோயிலைச் சுத்தம் செய்யும் கைங்கர்யம் என்பது சேவகனுடைய இயற்கையான செயலாகும். அந்த கைங்கர்யம் உபாயமாக ஆகாது என்பது இதனுடைய விளக்கம். ஸ்ரீவசன பூஷணத்தில் பிள்ளை லோகாசாரியர் 88வது ஸூத்ரத்தில் மிகவும் அழகாக விளக்குகிறார். ஆண்டானுடைய புகழ் திவ்யப் பிரபந்த வியாக்யானங்களில் சில இடங்களில் காட்டப்பட்டுள்ளதைப் பார்ப்போம்.



நாச்சியார் திருமொழி 1–1ல் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில் தை ஒரு திங்கள் "தரை விளக்கி" ஆண்டாள் அருளிச் செய்தாள். தரையைச் சுத்தம் செய்வது திருக்கண்ணமங்கை ஆண்டான். எதையும் அடைய வேண்டும் என்று இல்லாமல் பகவான் கைங்கர்யம் மட்டுமே சிறந்தது என்று செய்து வந்தார்.

திருமாலை 38. *"உன் கடைத்தலை இருந்து வாழும் சோம்பர்"* என்றால் "எவரொவர் எம்பெருமான் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளாரோ அவரே வாழும் சோம்பர்". அதாவது, திருக்கண்ணமங்கையாண்டான் போல் பத்தராவி பெருமானே கதி என்று இருப்பவர்" என்று பொருள் உரைக்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. திருவாய் மொழி 10–2–7"கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே" ஒருவன் எம்பெருமானுடைய கோயிலைச் சுத்தம் செய்து கைங்கர்யம் செய்தாலே அவனுடைய பாபங்கள் அழிந்து விடும். திருக்கண்ணமங்கை ஆண்டான் அனைத்துச் செயல்களையும் விட்டு எப்பொழுதுமே திருக்கண்ணமங்கை பக்தவத்சலப் பெருமாள் சந்நிதியிலேயே இருந்து வெளியே எங்கும் போகாமல் பகவானுக்கே கைங்கர்யம் செய்து வாழ்ந்தார் என்று நம்பிள்ளை ஈடு வியாக்யானத்தில் ஆண்டானின் பெருமையை எடுத்துக் கூறினார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் தன் சிஷ்யன் ஆண்டானுக்கு த்வய மஹா மந்திரத்தில் விசேஷ அர்த்தத்தை திருவாய்மொழி பாசுரம் மூலம் விளக்கினார். இதை கேட்டவுடன், *"பொலிக பொலிக பொலிக" (5-2-1).*

"பவிஷ்ய தாசாரியரின் திவ்ய மங்கல லிக்ரகத்தை தேவரீர் கனவில் சேவித்தீர். இப்பேர்பட்ட உம்முடன் அடியேனுக்கு ஸம்பந்தம் இருக்கிறது என்பதே அடியேனுக்கு மிகவும் பாக்கியம்" என்று திருக்கண்ண மங்கையாண்டான் கூறி நாதமுனிகளின் திருவடிகளில் தெண்டம் சமர்பித்தார். இதில் ஆண்டானின் ஆசாரிய பக்தி விளங்குகிறது. நாமும் எம்பெருமான் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருக்க இவருடைய திருவடித் தாமரைகளை வணங்கி பிரார்த்திப்போம்.

திருக்கண்ணமங்கை ஆண்டான் திருவடிகளே சரணம்

***– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,***
***சென்னை, 9790938925.***



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

“நான் இந்த மலையை எல்லாமுமாக நினைத்து இங்கு வாழ்ந்து வந்தேன். இம்மலையைச் சுற்றியுள்ள நீர் வீழ்ச்சிகளிலும் நீர் நிலைகளிலும் புனித நீராடியும், “கராள நரசிம்ம” மந்திர ஜபமும் செய்து வந்தேன். முடிவாக உங்களுடன் போரும் செய்தேன். உடலளவில் நான் மரணமெய்தியிருந்தாலும் இம்மலை என்னுடைய பெயரைக் கொண்டதாக விளங்க வேண்டும் என்பது என் கோரிக்கை” என்றான் வ்ருஷபாசுரன்.

ஸ்வாமியும் சரியென ஆமோதித்து வ்ருஷபா சுரனுக்கு முக்தி அளித்தார். அந்த நேரத்தில் தேவர்கள் பூமாரி பொழிந்தனர். குகைகளுக்குள் மறைந்திருந்த முனிவர்கள் குகையை விட்டு வெளியில் வந்து ஸ்வாமியை வாயாரப் புகழ்ந்து பாடி வணங்கினர்.

அப்பொழுது ஸ்வாமி முனிவர்களைப் பார்த்து, “முனிவர்களே! இனி நீங்கள் அச்சமின்றி இம்மலை எங்கும் சுற்றித்திரியலாம். உங்களுடைய தவத்திற்கு இனி எந்தவொரு தடையும் இருக்காது” என அபயம் அருளிப் பின் மறைந்து போனார்.

இக்கதையைச் சதானந்த முனிவர் ஜனகருக்குக் கூற, அதைக்கேட்ட ஜனகர் மிகவும் மகிழ்ந்து “முனிவரே! “வ்ருஷபாத்ரி” என்ற பெயருக்குச் சரணத்தை இப்பொழுது தெரிந்து கொண்டேன். இருந்தாலும், இந்த மலைக்கு “அஞ்சனாத்ரி” என்ற பெயர் உருவாவதற்குக் காரணங்கள் என்னவோ” என வினவினான். முனிவர் மகிழ்ச்சியோடு அக்கதையையும் உங்களுக்குக் கூறுகிறேன் என்றார்.

கேசரி ஒரு வானர வீரன். அவனுடைய மனைவி அஞ்சனை மதங்க முனிவரிடம் சென்று, “முனிவர்களில் சிறந்தவரே! மகப்பேறு இல்லாதவர்களுக்கு புண்ணிய கதி இல்லை என்பார்கள் அல்லவா! நானொரு குழந்தை பாக்கியம் இல்லாதவர். நான் ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கோரிக்கை. என் கோரிக்கை நிறைவேற நான் எவ்விதமானத் தவங்களைச் செய்ய வேண்டும்? என்று வினவினார்.

அப்பொழுது மதங்க முனிவர் அஞ்சனையிடம்... “அம்மா உன்னுடைய கோரிக்கை நியாயமானதே! நான் சொல்வதைக் கேள். இங்கிருந்து பம்பா சரோவருக்குக் கிழக்கில் ஐம்பது யோசனை தூரத்தில் நரசிம்மன் ஆசிரமம் உள்ளது.

அந்த ஆசிரமத்தின் தென்திசையில் நாராயணாத்ரி அமைந்துள்ளது. அந்த மலைக்கு அருகில் ஸ்வாமி புஷ்கரணி உள்ளது. ஸ்வாமி புஷ்கரணிக்கு வடக்குத் திசையில் இரண்டு கல் தூரம் சென்றால் ஆகாச கங்கை என்னும் தீர்த்தம் உள்ளது.

நீ அந்த இடத்திற்குச் சென்று அங்கு உள்ள தீர்த்தத்தில் மூன்று வேளை நீராடி பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்து வருவாயாக. அப்பொழுது நிச்சயமாக உனக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்” எனக் கூறினார்.

அவ்வாறே அஞ்சனாதேவி மதங்க முனிவர் கூறியபடி நாராயணாத்ரி சென்றடைந்தாள். ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, அந்த புஷ்கரிணிக்கு அருகிலேயே உள்ள அரசமரத்தைச் சுற்றி வணங்கினாள். அங்கிருக்கும் வராஹ ஸ்வாமியை வணங்கிய பின்பு, ஆகாச கங்கை உள்ள இடத்திற்குச் சென்று மதங்க முனிவர் கூறியவாறு, மூன்று வேளை தீர்த்தத்தில் நீராடி, உபவாச விரதத்தை மேற்கொண்டு, ஒரு வருட காலம் தவத்தை மேற்கொண்டாள்.

அஞ்சனாதேவியின் தவத்தை மெச்சிய வாயுதேவன் அவள் உண்பதற்காக தினமொரு கனியைக் கொடுத்து வந்தார். அவ்வாறாக அஞ்சனாதேவி பன்னிரண்டு வருடங்கள் கடும் தவம் செய்து விரதத்தை நிறைவேற்றினாள். வழக்கம் போல்


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையானின் அக்ஷர தீபிகை
ஸப்தகிரி



மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- “ஸப்தகிரி” படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ‘ஸப்தகிரி’ வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.


வாயுதேவன் ஒரு நாள் கனியைக் கொடுத்தான். அக்கனியை உண்ட அஞ்சனாதேவி கருவுற்றாள். பத்து மாதத்தில் அஞ்சனை ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். ஒரு மகாபலசாலியான குழந்தையைப் பெற்றெடுத்ததற்காகத் தேவர்கள் அனைவரும் பூமாரி பொழிந்தனர்.

அஞ்சனை பெற்றெடுத்த பிள்ளை திடமான உறுதியான உடல்வாகு உடையவனாகவும், பெரிய வால் உடையவனாகவும், கண் கூசும் ஒளி படைத்தவனாகவும் விளங்கினான். அதைக்கண்ட முனிவர்கள்! இக்குமாரன் இந்த உலகத்தில் மிகச் சிறந்தவனாக விளங்குவான் எனக் கூறி அக்குழந்தைக்கு அனுமன் எனப் பெயர் சூட்டினர்.

இவையனைத்தும் திரேதா யுகத்தில் நடந்த நிகழ்வுகளாகும். அஞ்சனை தவம் செய்த இடமானதாலும், அங்கேயே குழந்தை பாக்கியம் பெற்றதாலும் அம்மலைக்கு அஞ்சனாத்ரி என்று பெயர் வழங்கலாயிற்று.

மஹாராஜா! அதுமட்டுமல்ல. பாம்புகளுக்குத் தலைவனாகிய ஆதிசேஷன், வாயுதேவனின் தோல்வியைத் தழுவியபோது துவாபர யுகத்தில் மலைவடிவமாகி அமைந்ததினால் இம்மலைக்கு “சேஷாத்ரி” என்ற பெயரும் மிகவும் பிரசித்தமானது என்று சதாநந்தர் கூறினார்

ஜனக மஹாராஜா என்ன ஆதிசேஷன் தோல்வி தழுவுவதா? வாயுதேவன் வெற்றி பெறுவதா? இது விந்தையாக உள்ளதே! இதற்குக் காரணம் என்ன? என்று வினவினார்.

அப்பொழுது சதாநந்தர் அக்கதையை விரிவாக எடுத்துக் கூறினார். வைகுண்டத்தில் ஆதிசேஷன் ஸ்ரீஹரியின் ஆலயத்தில் வாயில் காப்போனாகத் தன் கடமையைச் சிறப்பாகச் செய்து வந்தார். ஒருநாள் வாயுதேவன் விஷ்ணு ஆலயத்தின் வாயில்வரை வந்து உள்ளே புகுவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கையில் ஆதிசேஷன் “வாயுதேவா! நீங்கள் ஆலயத்திற்குள் செல்வதற்கு அனுமதி இல்லை. அங்கேயே நில்! நில்!” என கர்ஜித்தான்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...

ஆனி மாதம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகச் சிறப்பான மாதம். ஏனெனில் ஆழ்வார்களுள் தமக்கு ஒன்றும் வேண்டாமல் பெருமாளுக்குப் பரிந்து வாழ்த்திய பெரியாழ்வாரும், நாலாயிர திவ்ய பிரபந்தம் முழுவதையும் நமக்கு நம்மாழ்வாரிடம் இருந்து பெற்று, அவற்றுக்கு இசையும் அமைத்து வழங்கிய வள்ளல் ஸ்ரீமந்நாதமுனிகளும் ஆனியில் தோன்றியதேயாகும். பெரியாழ்வார் விஷ்ணு சித்தர் எனும் திருநாமத்தோடு ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயர் குலத்து அந்தணர் மரபில் ஆனி மாதம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இதை ***''ஸ்வாத்யாம் பாஸ்கர வாஸரே சுப திதா ஏகாதாசீ நாமநி ஸ்ரீமான் ஆவிரபூத் அசிந்த்ய மஹிமா ஸ்ரீவிஷ்ணு சித்தோ அநக:''*** எனும் பிரமாண சுலோகம் கூறுகிறது.



# பெரியாழ்வாரும் ஸ்ரீமந்நாத முனிகளும்

***– தாமல் திரு. வி.பி.சடகோபன், சென்னை.***

குருபரம்பராபிரபாவம் இவர் தோன்றும்போதே பிரஹலாதன் போல் ஜன்ம வைஷ்ணவராகப் பிறந்தார் என்று போற்றுகிறது. மாலாகாரரிடம் கண்ணன் பூ இரந்து பெற்றதை நினைந்து இவரும் இளமையிலேயே ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங் கோயில் உடையானுக்குத் திருமாலை கட்டிச் சாத்துவதை மிக்கப் பெரும் விருப்போடு செய்து வந்தார்.

அக்காலத்து அரசனாகிய பாண்டியன் வல்லப தேவன் பரம்பொருள் நிர்ணயம் செய்ய ஒரு வித்வத் சபையைக் கூட்ட, வடபெருங்கோயில் உடையான் இவர் கனவில் வந்து "நீர் மதுரை சென்று அரசவையில் நானே முழு முதல் பொருள் என்று வேதப்பொருள் நிலைநாட்ட வேண்டும்" என்று கூற, இவர் "அடியேனுக்குப் பூத்தொடுப்பது தவிர வேறு தெரியாது. வேதங்கள் தத்துவங்கள் அறியேன்" என்றார்.

பெருமாள் "நீர் சபைக்குச் செல்லும். உம் திருவாக்கில் திருமால் பரத்துவ விஷயங்கள் தாமே வரும்'' என்றார். அவர் அங்கு சென்றதும் யாவரும் வியந்து போற்ற அனைத்து வேத வேதாந்தப் பொருள்களையும் ஆற்றொழுக்காக எடுத்தோதி பரிசுக் கிழி வென்றதும் பிரசித்தமான வரலாறு. அப்படி வென்றவரை அரசன் தன் ஆனை மீது அமர்த்தி சிறப்பு செய்ய, அதைக் காண எம்பெருமான் பெரு மகிழ்ச்சியோடு வந்தார்.

அவர் அழகு கண்டு கண் எச்சில் படுமோ என்று பயந்த விஷ்ணு சித்தர் அவரிடம் தமக்கு வரமோ மோக்ஷமோ வேண்டாமல் அவர் ஒரு தீங்கும் இன்றி விளங்க வேண்டும் என்று பரிந்து பன்னிரண்டு பாசுரங்களை அந்த யானையின் மணி ஒலியே தாளமாக அமைத்துப் பாடினார். அதுவே திருப்பல்லாண்டு.

வேதத்துக்கு ஓங்காரம் போல் திவ்ய ப்ரபந்தம் முழுவதுக்கும் இது அமைந்து இதுவே எப்போதும் தொடக்க பிரபந்தம் ஆகி விட்டது. ***''வேதத்துக்கு ஓம் என்னுமது போல் உள்ளதுக்கெல்லாம் தான் மங்கலம் ஆதலால்''*** என்று மாமுனிகள் போற்றுகிறார் உபதேச ரத்தின மாலையில். பெரியாழ்வாருக்கு மட்டுமே ஐந்து பாசுரங்கள் என்பது மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்களை விட இவர் சிறப்பைக் காட்டும்.

அவதாரங்களைப் பாடும்போதும் அவ்வவதார காலத்தில் நிகழ்ந்த ஆபத்துக்களால் பெருமாளுக்கு ஒரு தீங்கு வருமோ என்று பயந்தது இவர் பக்தி

விசேஷம். இவரது அளப்பரிய அன்பின் வடிவாகவே ஆண்டாள் வளர்ந்து பெருமாளை ஆண்டாள் எனல் மிகை அன்று. பெரியாழ்வார் போல் ஆசார்ய கோஷ்டியில் ஸ்ரீமந்நாதமுனிகள் திகழ்ந்தார். இவரே ஓராண் வழி ஆசார்ய பரம்பரையில் முதல்வர். ஆழ்வார்களுக்குப் பின் குரு பரம்பரையில் இவர் முதல்வராகி ஆழ்வார்கள் அனைவரின் பாசுரங்களையும் நம்மாழ்வார் திருவருளால் பெற்று, அவற்றுக்கு பண் அமைத்துப் பரப்பியவர் இவரே.



ஆகவே மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் இவரை ***"ஆழ்வார்கள் ஏற்றம் அருளிச் செயல் ஏற்றம் அறிவார் ஆர்... நாதமுனி நம் தேசிகரை அல்லால்"*** என்று போற்றுகிறார். இவர்களை நினைந்தும், இவர்கள் அரும் செயலைப் போற்றியும் வைணவ உலகம் வாழ்ச்சி பெறுகிறது.

***"தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவாரார்***
***அருளிச்செயலை அறிவாரார் - அருள் பெற்ற***
***நாதமுனி முதலாம் நம் தேசிகரையல்லால்***
***பேதை மனமே உண்டோ பேசு***


– உபதேச ரத்தின மாலை 36

## தாள்ளபாக்கம் ஸ்ரீ சென்னகேசவ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 05-07-2025 | சனி | ------ | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 06-07-2025 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம் துவஜாரோஹணம் | பெரியசேஷ வாகனம் |
| 07-07-2025 | திங்கள் | சிறியசேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 08-07-2025 | செவ்வாய் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 09-07-2025 | புதன் | கல்பவிருக்ஷ வாகனம் | சர்வபூபால வாகனம் |
| 10-07-2025 | வியாழன் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருடசேவை |
| 11-07-2025 | வெள்ளி | அனுமத் வாகனம் | யானை வாகனம் |
| | | மாலை : வஸந்தோத்ஸவம் | |
| 12-07-2025 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 13-07-2025 | ஞாயிறு | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 14-07-2025 | திங்கள் | அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |








இதே நாட்களில் இத்தலத்திலேயே கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ சித்தேஸ்வர ஸ்வாமிக்கும் சைவாகமப்படி பிரம்மோத்ஸவம் நடைபெறும்.

# திருநெடுங்குன்றம்



– பேராசிரியர் ஜி. நரசிம்மன், அனந்தபுரம்

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குன்றம் எனும் திருத்தலத்தில் சுகப்பிரம்மரிஷி விருப்பத்திற்கு இணங்கி தீர்க்காசலேஸ்வரர் என்னும் திருப்பெயரால் இலிங்க வடிவமுற்ற சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதைப் போன்றே மாயோனாகிய எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரனாய் லக்ஷ்மணன், சீதை மற்றும் அனுமனோடு சமேதரராய் சுகப்பிரம்ம மகரிஷிக்கு அருள் பாலித்த காட்சியை ஓர் ஆலயமாக அமைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். தீர்க்காசலேஸ்வரர் கோயில் பூமால் செட்டி குளத்திற்கு அருகே உள்ள நெடுஞ்சாலையின் மேற்கு திசையிலும், ஸ்ரீ ராமச்சந்திர பெருமாள் தேவாலயம் மேலாண்ட ராஜ வீதியில் மேற்குப் புறத்திலும் அமைந்துள்ளது

பராசரர் முனிவருக்கும் மச்சகந்திக்கும் மகனாக வேதவியாசர் தோன்றினார். வேதங்களைத் தொகுத்ததால் வேதவியாசர் எனும் பெயர் பெற்றார். வேதவியாசர் மகப்பேறு வேண்டி சிவனை நோக்கி யாகம் செய்வதற்குத் தீக்கடைக்கோல் (அரணியை) கொண்டு கடைந்தார். அப்போது தேவலோகத்தில் இருக்கும் அப்சரசு என அழைக்கப்படும் பன்னிரண்டு பெண்களில் ஒருவரான கிருதாசி என்பவள் மண்ணுலகிற்கு வந்து "சுகம்" எனும் கிளி உருவம் கொண்டு வியாசரைக் காமத்தில் மூழ்குவித்தாள். இன்பத்திற்கு ஆட்பட்ட வியாசரின் வீரியம், கடைந்து கொண்டிருந்த அரணியில் வீழ, அதன் பலனாக சுகர் தோன்றினார். "சுகம்" என்றால் கிளி எனப் பொருள்படும். இவர் கிளியின் முகத்துடன் தோன்றியதால் சுகர் சுகபிரம்மரிஷி என அழைக்கப்பட்டார்.

நன்னரும் தவத்தின் பெருமை யெல்லாம்
நவிலரும் வகையில் ஒன்று சேர்ந்து
இன்னரும் ஞானத்தின் திருவுரு வாக
இகத்தில் சுகர்முனி தோன்றலானார்

சுகர் தோன்றும்பொழுதே மகாஞானியாகத் தோன்றினார். நாரத மகாமுனி சுகரை அணுகி அவர் மேலும் ஞானம் பெறும் வழிவகைகளை எடுத்துரைத்தார்.

இதனால் அறிவுத் தெளிவு பெற்ற சுகமுனி "உலகமே ஒரு மாயை" என உணர்ந்து, தன் தந்தையான வேதவியாசரைப் பிரிய எண்ணம் கொண்டார். பின்னர் மலையின் வடிவு கொண்டு விளங்கும் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்றார். அவ்வழியில் அப்சரசுக்கள் எனும் பன்னிரண்டு தேவருலகப் பெண்கள் ஆற்றில் நீராடிக் கொண்டு இருந்தனர். சுகர்முனி அவ்வழியே வருவதைக் கண்டாராயினும் அப்பெண்கள் எவ்விதச் சலனம் அற்று நீராடுவதில் முனைப்பாக இருந்தனர். தன் மகனைத்தொடர்ந்து வரும் வியாசரைக் கண்ட அப்சரசுக்கள் அவசரமாக நீரின்று நீங்கி சென்று ஆடையை அணிந்து கொண்டனர்.

சுகர், சிவபெருமான் நெடுங்குன்றாக உயர்ந்து நிற்கும் மலைச்சாரலை அடைந்தார். சிவனை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினார். அப்போது "ரம்பா" எனும் தெய்வமகள் சுகரை மயக்க முயற்சி செய்ய, அதில் அவள் தோல்வி

## ஸப்தகிரி வாசகர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப்படுத்தவும். மேலும்,** chiefeditortpt@gmail.com **எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

உற்றாள். சுகமுனி ரம்பையின் முயற்சிக்கு எவ்விதச் சலனம் இன்றி இருந்தார். அவரின் நிலையைக் கண்ட ரம்பை பயந்து தேவ லோகத்திற்குச் சென்றார்.

*குனிந்து வந்து மலையினை முகத்தின் முன்னே*
*குளிர் காற்றால் மணம் வீசப் பிடித்துக்கொண்டு*
*முனிவரான சுகரைத்தன் உள்ளு வக்க*
*முல்லை அரும்பு போன்று விரல் நுனியினாலே*
*கனிவுடனே மெதுவாகத் தொட்டும் பார்த்தாள்*
*கல்போன்று அப்பொழுதும் அசையவில்லை*
*தனனித்த பெரும் சுகர் முனியின் ஆற்றல் கண்டு*
*தனக்குற்ற பயமொன்றை நினைக்கலானாள்*

(230)

சுகர் முனியின் மன உறுதியைக் கண்டு நெடுங்குன்றாக உயர்ந்து விளங்கும் சிவன் சுகர் முன் தோன்றினார். சுகர் ஈசுவரனின் திருப்பாதங்களைப் பணிந்து எழுந்து,

*திங்களனி சடையானே! மீண்டும் என்னை*
*மண்ணகத்தில் அவதரிக்கச் செய்தீர் இந்த*
*மண்வாழ்வு வேண்டன் முத்தி தாரும்*

(246)

என்றார். சுக முனிவரின் சொற்களைக் கேட்ட சிவன் பின்வருமாறு கூறலானார்.

1) கிருத யுகத்தில் திருமாலை, தேவர்கள் வேண்ட எம்பெருமானும் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்த உலகில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்ட தசரத சக்கரவர்த்தியின் மூத்த மனைவியான கோசலையின் மணி வயிற்றில் பிறந்தான் இராமன்.

சித்திரை மாதம் பூர்வ பட்ச நவமி திதியில் புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் புதன் கிழமை அன்று ஐந்து கோள்கள் உச்சத்தில் இருக்கும் வேளையில், கடக லக்னத்தில் சந்திரனும் பிருஹஸ்பதியும் சேர்ந்து தோன்றும் நல்ல நேரத்தில் உலக நாயகரும், எல்லோராலும் வணங்கப் படுபவரும், எல்லா லட்சணங்களும் பொருந்திய வருமான ஸ்ரீராமனை கௌசல்யை பெற்று எடுத்தாள்.

*ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து,*
*அரு மறைக்கு உணர்வு அரும் அவனை,*
*அஞ்சனக்*
*கரு முகிற் கொழுந்து எழில் காட்டும் சோதியை*
*திரு உறப் பயந்தனள் - திறம் கொள் கோசலை.*

– கம்ப. பால. திரு. அவதார.105

2) தேவர்களின் வரத்தினால் அன்னை அதிதி வஜ்ரபாணியான இந்திரனைப் பெற்றதைப் போலக் கைகேயிக்குச் சத்திய பராக்கிரமனான பரதன் பூச நட்சத்திரம் மீன லக்னத்தில் சக்கராயுதத்தின் அம்சமாகப் பிறந்தான்.


*ஆசையும் விசும்பும் நின்று*
*அமரர் ஆர்த்து எழ*
*வாசவன்*
*முதலினோர்*
*வணங்கி*
*வாழ்த்துறப்*
*பூசமும் மீனமும்*
*பொலிய*
*நல்கினாள்*
*மாசு அறு*
*கேகயன் மாது*
*மைந்தனை*

– கம்ப.பால. திரு. அவதார. 106



திருநெடுங்குன்றத்தை தொடர்ந்து தரிசிப்போம்...

# குறுக்கெழுத்துப் புதிர் -108




## இடமிருந்து வலம்

01. பத்மாவதித் தாயாரை நினைத்து "குறுக்க நடவரோ கொம்மலாலா" என்ற பாடலைப் பாடியவர்...(6)

06. 2021-ஆம் ஆண்டு திருமலை போன்றே திருச்சானூர் பத்மாவதித் தாயார் சன்னிதியிலும்...(5) ஏற்படுத்தப்பட்டது.

13. முருகப்பெருமானின் வரலாற்றை இராமபிரானுக்குக் கூறியவர்...(8)

18. என்றும் பதினாறு என வாழும் மார்கண்டேயரின் தந்தை...(7)

21. காசி மாநகர் ...(3) நதிக்கரையில் அமைந்துள்ளது.

22. மஹாலக்ஷ்மி குறித்து சதுச்லோகி இயற்றியவர்...(6)

## வலமிருந்து இடம்

04. சரணாகதி கத்யம் இயற்றியவர்...(6)

12. சீதா தேவிக்கு அபச்சாரம் இழைத்தும் அவரால் மன்னிக்கப் பட்டவன்...(5)

16. ரேணுகாதேவியின் புதல்வன்..(6)

19. காஞ்சி பொற்றாமரைக் குளத்தில் திருமாலின் சங்கின் அம்சமாக அவதரித்தவர்...(7)

24. காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் அருளாட்சி புரியும் தேவி ...(7)

25. திரிலோக சஞ்சாரி, தேவரிஷி...(4)

## மேலிருந்து கீழ்

02. மைலாப்பூர் ஆதிகேசவப் பெருமாளின் பெருமாட்டி...(6)

03. ஜானகி தேவியின் தந்தை...(4)

04. ஸ்ரீஸ்ரீநிவாச கத்யம் இயற்றியவர்...(11)

05. மார்கண்டேயரின் தாயார்...(6)

07. ...(6) வதைக்கப்பட்ட தினத்தையே தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடுகிறோம்.

தொகுப்பு : திருமதி.எம்.இராஜகுமாரி,ஆரணி, 99762 38430.

புதிருக்கு விடை அறிய 44ம் பக்கம் பார்க்கவும்...

08. திருமலை திருப்பதியில் கலியுக பக்தர்களுடன் தேவாதி தேவர்களும் கலந்துக் கொண்டு கொண்டாடும் திருவிழா...(8)

09. மகாபாரதத்தில் ஆழ்வார் என்று போற்றப்படுபவர்...(4)

10. திருமாலின் நாயகியருள் ஒருவர்....(3)

## கீழிருந்து மேல்

11. ஸ்ரீராமபிரானின் தாயார் கௌசல்யா தேவிக்கு சத்தீஸ்கர் மாநிலம் ...(5)யில் கோயில் உள்ளது.

14. ஸ்ரீராமர் ...(3) யில் நடந்த சுயம்வரத்தில் சிவதனுசை முறித்து சீதா தேவியை மணந்தார்.


15. திருமலையில் உள்ள புனிதத் தீர்த்தங்களில் ஒன்று....(6)

17. காசி திருத்தலத்தைப் போல் தெற்கே இராமநாத ஸ்வாமி அருள்புரியும் திருத்தலம்....(6)

20. உலகின் படைத்தல் தொழிலை நடத்துபவர்...(4)

23. இராமபிரானுக்கு கங்கை நதியைக் கடக்க உதவிய படகோட்டி...(3)

# திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
## 06-07-2025 முதல் 08-07-2025 வரை







கருட அஷ்டோத்ரம் பாராயணம் செய்பவர்களுக்கு திருமணப்பேறு, பிள்ளைப்பேறும் கிட்டிடும். ஆயுள் கூடும். தேக வலிமைக் கூடும். தீய கனவுகள் வராது. எம்பெருமானிடம் பக்தி பெருகும். இவ்வாறாக சகல நன்மைகளும் நல்கும் “கருட அஷ்டோத்திர சத நாமாவளி” ஸ்தோத்திரம் கருட பஞ்சமியை முன்னிட்டு ஸப்தகிரி வாசகர்களுக்காக...

நம: பன்னகனத்தாய வைகுண்ய வசவர்தினே ।
ச்ருதிஸிந்து ஸுதோத்பாத மந்தராய கருத்மதே ।।



# ஸ்ரீகருட அஷ்டோத்தர சதநாமாவளி

ஓம் ஸ்ரீவைநதேயாய நம:
ஓம் ககபதயே நம:
ஓம் காச்யபாயாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் தப்தகாஞ்சநவர்ணாபாய நம:
ஓம் ஸுபர்ணாய நம:
ஓம் ஹரிவாஹநாய நம:
ஓம் சந்தோமயாய நம:
ஓம் மஹாதேஜஸே நம:
ஓம் மஹோத்ஸாஹாய நம: (10)
ஓம் மஹோபலாய நம:
ஓம் ப்ரஹ்மண்யாய நம:
ஓம் விஷ்ணுபக்தாய நம:
ஓம் குந்தேந்து தவளாநநாய நம:
ஓம் சக்ரபாணிதராய நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் நாகாரயே நம:
ஓம் நாகபூஷணாய நம:
ஓம் வித்வந்மயாய நம:
ஓம் விசேஷஜ்ஞாய நம: (20)
ஓம் வித்யாநிதயே நம:
ஓம் அநாமயாய நம:
ஓம் பூதிதாய நம:
ஓம் புவநதாத்ரே நம:
ஓம் பயக்னேய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் ஸப்த சந்தோமயாய நம:
ஓம் பக்ஷிராஜா நம:
ஓம் ஸுராஸுரஸுபூஜிதாய நம:
ஓம் புஜங்கபுஜே நம: (30)
ஓம் கச்சபாசிநே நம:
ஓம் தைத்யஹந்த்ரே நம:

ஓம் அருணாநுஜாய நம:
ஓம் நிகமாத்மனே நம:
ஓம் நிராதாராய நம:
ஓம் நிஸ்த்ரைகுண்யாய நம:
ஓம் நிரஞ்ஜநாய நம:
ஓம் நிர்விகல்பாய நம:
ஓம் பரஞ்ஜ்யோதிஷே நம:
ஓம் பராத்பராய நம:(40)
ஓம் பரஸ்மை நம:
ஓம் சுபாங்காய நம:
ஓம் சுபதாய நம:
ஓம் சூராய நம:
ஓம் ஸூக்ஷ்மரூபிணே நம:
ஓம் ப்ருஹத்தநவே நம:
ஓம் விஷாசிநே நம:
ஓம் விஜிதாத்மநே நம:
ஓம் விஜயாய நம:
ஓம் ஜயவர்தநாய நம:( 50)
ஓம் அஜாஸ்யாய நம:
ஓம் ஜகதீசாய நம:
ஓம் ஜநார்தநமஹாத்வஜாய நம:
ஓம் கநஸந்தாபநசேத்ரே நம:
ஓம் ஜராமரணவர்ஜிதாய நம:
ஓம் கல்யாணதாய நம:
ஓம் காளாதீதாய நம:
ஓம் களாதர ஸமப்ரபாய நம:
ஓம் ஸோமபாய நம:
ஓம் ஸுரஸங்கேசாய நம:(60)
ஓம் யஜ்ஞாங்காய நம:
ஓம் யஜ்ஞபூஷநாய நம:
ஓம் வஜ்ராங்காய நம:
ஓம் வரதாய நம:
ஓம் வந்த்யாய நம:
ஓம் வாயுவேகாய நம:
ஓம் வரப்ரதாய நம:
ஓம் மஹாஜவாய நம:
ஓம் விதாரிணே நம:
ஓம் மன்மதப்ரியபந்தநாய நம:(70)
ஓம் யஜுர்னாம்னே நம:
ஓம் அனுஷ்டுபஜாய நம:
ஓம் மாரகாய நம:
ஓம் காலஞ்ஜாய நம:
ஓம் கமலேஷ்டாய நம:
ஓம் கலிதோஷநிவாரணாய நம:
ஓம் ஸ்தோமாத்மனே நம:
ஓம் த்ரிவ்ருன்மூர்த்ணே நம:
ஓம் பூம்னே நம:
ஓம் காயத்ரீ தலோசனாய நம: (80)
ஓம் ஸாமகாநரதாய நம:
ஓம் ஸ்ரக்விநே நம:
ஓம் ஸ்வச்சந்தகதயே நம:
ஓம் அக்ரண்யே நம:
ஓம் விநதாநந்தநாய நம:
ஓம் விஜிதாராதிஸங்குலாய நம:
ஓம் பதத்வரிஷ்டாய நம:
ஓம் ஸர்வேசாய நம:
ஓம் பாபக்நே நம:
ஓம் பாபமோசகாயநம: (90)
ஓம் அம்ருதாஞ்சவே நம:
ஓம் அம்ருதவபுஷே நம:
ஓம் ஆனந்தகதயே நம:
ஓம் ஸுதாகும்பதராய நம:
ஓம் துர்தராய நம:
ஓம் அஸுரபஞ்ஜநாய நம:
ஓம் அக்ரஜிதே நம:
ஓம் ஜயகோபாய நம:
ஓம் ஜகதாஹ்லாதகாரகாய நம:
ஓம் பகவதே நம: (100)
ஓம் ஸ்தோத்ராய நம:
ஓம் சோபாய நம:
ஓம் ஸ்வர்ணவபுஷே நம:
ஓம் ஸ்வராஜே நம:
ஓம் வித்யுந்நிபாய நம:
ஓம் விஸாலாங்காய நம:
ஓம் விநதா தாஸ்ய விமோசகாய நம:
ஓம் ஸ்ரீகருடாய நம:

ஸமஸ்த ஸன்மங்களானி ஸன்து



வேகோத்தானம் விதானம் வ்யஜன மமகுணம் வைஜயந்தீ ஜயந்தீ
மித்ரம் நித்யார்யமித்ரம் யுதி விஜயரதோ யுக்யயோகானபேக்ஷ: ।
தாஸோ நிஷ்பர்யுதாஸோ தமதனயபிதோ நிஸ்ஸஹாய: ஸஹாய:
தோதுயோ தாஸ்மதீயம் துரித மதரிதாராதிபக்ஷை: ஸ்வபக்ஷை: ॥

ஆதாரம்: பேராசிரியர் கே.சர்வோத்தமராவ் எழுதிய "பெரிய திருவடி - சிறிய திருவடி" (தெலுங்கு)



திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
புஷ்பயாகம்
02-07-2025



அப்பளாயகுண்ட்டா
ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி
புஷ்பயாகம்
12-07-2025

ஸப்தகிரி (மலை) – திருமலை என்றும், ஸ்ரீகோவிந்த ராஜன் சந்நிதி இருப்பது திருப்பதி என்றும் வழங்குவர். தாயாரின் சந்நிதி இருப்பது திருச்சானூர். கீழ் திருப்பதியைத் திருப்பதி என்றும், மேல் திருப்பதியை திருமலை என்றும் கூறுவர்.

**புராண வரலாறு :**

ஸூதர் சொன்னது. நைமிசாரண்யத்தில் சௌனகர் முதலான ரிஷிகளுக்கு ஒவ்வொரு யுகத்திலும் இத்திவ்ய தேசமாகிய மாமலை, ஒவ்வொரு பெயரைப் பெற்றுள்ளது. க்ருதயுகத்தில் விருஷாசலம் என்றும், திரேதாயுகத்தில் அஞ்சநாத்ரி என்றும், துவாபரயுகத்தில் சேஷாத்ரி என்றும், கலியுகத்தில் வேங்கடாத்ரி என்றும், இம்மலை வழங்கப்படுவதை,

*"க்ருததேவ்ருஷாத்ரிம், வசுஷ்யந்தி த்ரேதாயாம் அஞ்ஜநாசலம்*
*த்வாபரே சேஷசைலம் ச கலௌ ஸ்ரீவேங்கடாசலம்"*

என்ற சுலோகம் அறிவிக்கும். கிருத யுகத்தில் விருஷப அசுரன் என்ற அரக்கனுடன் போரிட்டு வென்ற எம்பெருமான், அவ்வரக்கனின் வேண்டுகோளின்படி வ்ருஷபாத்ரி என்ற பெயராலும், திரேதா யுகத்தில் இம்மலையில், அஞ்சனா தேவிக்கு ஆஞ்சநேயன் அவதரித்துப் பெருமை பெற்றதால், அஞ்சநாத்ரி என்ற பெயராலும், துவாபர யுகத்தில் வாயுவிற்கும் ஆதிசேஷனுக்கும் ஏற்பட்ட போட்டியில், ஆதிசேஷனின் செருக்கு நீங்கி, எம்பெருமானின் அருள் பெற்ற இடம் ஆதலால் சேஷாத்ரி என்ற பெயராலும், கலியுகத்தில் இம்மலையில் எம்பெருமான் திருமகளுடன் இணைந்து வாழ்வதால், இம்மலையை அடைந்தவர்கள் செய்த தீவினைகள் அனைத்தும் எரிக்கப்படுவதால் வேங்கடாத்ரி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது.


நைமிசாரண்யத்தில் மகரிஷிகள் ஒன்று சேர்ந்து கங்கைக் கரையில் மாபெரும் வேள்வியைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து, அந்த யாகத்தில் பிரமன், திருமால், சிவன் என்ற மூவரில் யாருக்கு முதன்மை கொடுப்பது என்று யோசித்து அதனைத் தீர்த்து வைக்க பிருகு மஹரிஷியிடம் சொல்ல, அவர் பிரமனிடம் சென்ற போது ராஜஸம் என்ற பண்பையும், சிவபிரானை அடைந்த போது தாமஸம் என்ற பண்பையும், வைகுண்டம் சென்றபோது பகவான் பெரிய பிராட்டி உடன் பாற்கடலில் பள்ளிகொண்ட நிலையில் தனது திருவடியால், எம்பெருமானின் திருமார்பில் உதைக்க பெருமான் சிறிதும் சீற்றம் கொள்ளாமல் உதைத்த திருவடியைப் பற்றி வருடிய காரணத்தால் சத்துவ குணம் நிறைந்த பகவானே முழுமுதற் பொருள் என்று அறிந்து, ரிஷிகளுக்குச் சொன்னார்.

திருவேங்கடம் திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...

# திருவேங்கடம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.





கருட பஞ்சமி விஷ்ணுவின் வாகனமான கருட பகவானின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகின்றது. ஆடி அமாவாசை கழித்து வரும் பஞ்சமியே கருட பஞ்சமி ஆகும். பிரம்ம தேவரின் மகனான காஷ்யபரின் மனைவிகள் கத்ரு மற்றும் வினதை ஆவர். கத்ருவின் மகன்கள் நாகங்கள் ஆகும். வினதையின் மகனே கருடன் ஆவார். ஒரு போட்டியில் வினதை கத்ருவுக்கு அடிமை ஆனாள். தன் தாய் வினதையை அடிமைத் தனத்திலிருந்து மீட்க, கருடன் இந்திரனிடமிருந்து அமிர்தத்தைக் கொண்டு வந்தார்.

கஜேந்திரன் என்ற யானை ஆயிரம் வருடங்கள் ஒரு முதலையிடம் மாட்டி கொண்டு பெருமாளே என்னைக் காப்பாற்று என்று கூப்பிட்டவுடன் அவரை உடனே தன் முதுகில் அமர வைத்து அழைத்து வந்தவர் கருடன்.

*''பதக முதலை வாய்ப்பட்ட களிறு கதறிக் கை கூப்பி என் கண்ணா*
*கண்ணா! என்ன உதவப் புள்ளூர்ந்து அங்கு உறு துயர் தீர்த்த*
*அதகன் வந்து அப்பூச்சி காட்டு கின்றான்''.*

என்கின்றார் இதனை பெரியாழ்வார் அழகாக. எல்லோரும் திருமாலிடம் பொன் வேண்டும். பொருள் வேண்டும். பிறவா நிலை வேண்டும் என்று கேட்கும் பொழுது அவருக்கு தான் வாகனமாக இருக்க வேண்டும் என்று வரம் கேட்டவர் கருடன். பன்னிரண்டு ஆழ்வார்கள் போல கருடரும் பெரிய திருவடி என்று மட்டுமல்ல "கருடாழ்வார்" என்றும் போற்றப்படுகின்றார்.

திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்த பொழுது தான் மட்டுமே வந்தார். கருடனைக் கூப்பிடவில்லை. எனவே அகோபிலம் சென்ற கருடர் அங்கே தவத்தைத் தொடங்கினார். மகிழ்ந்த திருமால், அவருக்கு உக்கிர நரசிம்மராகக் காட்சி கொடுத்தார்.




ஸ்ரீவேதாந்த தேசிகர் கருட மந்திரத்தை செபித்து கருடரிடமே ஹயக்ரீவ மந்திரத்தைக் கற்றார். இவர் கருட பஞ்சாசத் என்ற நூலை எழுதினார். அதில் கருடனின் மகிமைகள் வருகின்றன. இது கருட தண்டகம் என்றும் அழைக்கப்படுகின்றது.

இராம அவதாரத்தில் கூட கருடர், இராவணனின் மகன் இந்திரஜித் செலுத்திய நாக பாசத்தால் மயங்கிக் கிடந்த அனுமன் இலட்சுமணன் மற்றும் வானரப் படைகளை மயக்கத்திலிருந்து எழுப்பியது குறிப்பிடத் தக்கது. இதனை கம்பர் கூட தம் இராமாயணத்தில் அழகாகப் பாடி உள்ளார்.

*''இளையான் எழுந்து தொழுவானை அன்பின்*
*இளை ஆர மார்பின் அணையா...''*

"சந்திரனைப் போன்ற அழகுடைய கருடன் வந்து, நாக பாசத்தை விலக்கினார்.

ஒரு சமயம் வெள்ளையன் தீவு என்ற இடத்தில் இருந்து, அவர் கால்களில் ஒட்டிக் கொண்டு வந்த வெள்ளை மண்ணை திருநாராயணபுரம் என்ற

***– திரு. என். சிவராமன், உள்ளகரம், 98415 62116.***

தலத்தில் உதறினார். அதுவே வைணவர்கள் தங்கள் நெற்றியில் இட்டுக் கொள்ளும் திருமண் கட்டி ஆகும். ஆண்டாளை வளர்த்த பெரியாழ்வார் கூட கருடனின் அம்சம் தான். பெருமாளுக்கே பல்லாண்டு பாடியவர்.

இனி கருட பஞ்சமியை எப்படி அனுஷ்டிப்பது என்று பார்ப்போம்.

கருட பஞ்சமி அன்று அதிகாலை எழுந்து, நீராடி வீட்டையும், பூஜையறையையும் சுத்தப்படுத்த வேண்டும். வீட்டின் நுழைவாசல் கதவு அருகே உள்ள சுவரில் மஞ்சள், குங்குமம் தடவி வைக்க வேண்டும்.இது வீட்டில் நேர் மறை எண்ணங்களை அதிகப்படுத்தும்.

முடிந்தவர்கள் பெருமாள் கோயில் சென்று, கருடரை வழிபடலாம். மஞ்சள் சரடில் மலர் ஒன்றை வைத்து கையில் கட்டிக் கொள்ளலாம். பூஜை அறையில் “ஓம் கருடாய நம:”, “ஓம் நாகராஜாய நம” என்று வழிபடலாம்.

இதனால் குழந்தை பாக்கியம் உண்டாகும். கணவன்–மனைவிக்குள் ஒற்றுமை உண்டாகும். வீடு சுபிட்சமடையும். பகவத் கீதையில் கூட கண்ணன் “பறவைகளில் நான் கருடன்” என்று சொல்லி இருப்பது அவரது பெருமைக்குச் சான்றாகும்.

கருடர் நித்திய சூரிகளுள் ஒருவர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அதுபோல திருநாங்கூர் என்ற தலத்தில் தைப் பொங்கலுக்கு மறுநாள் நடைபெறும் 11 கருட சேவை உலகப் புகழ் பெற்ற ஒன்று. எனவே கருடரை வணங்கித் துயர் நீக்குவோம்.

உலகத்தைக் காக்கும் கடவுளான மகாவிஷ்ணு சயனம் காணும் பாம்பணையாக, இயக்கும் கடவுளான பரமன் அணிந்து மகிழும் ஆபரணமாக, இச்சா சக்தியான ஆதி சக்தி சிரசில் படம் எடுத்தாடும் குடையாக, தேவர்களின் சேனாதிபதியான ஆறுமுக வேலனின் திருவடியை வணங்கும் நாக அஸ்திரமாக, விநாயக மூர்த்தி உடலில் சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்ட பூணுலாக, இன்னும் பல இந்துக்கள் வணங்கி வழிபடும் இறை மூர்த்திகளில் நிறைந்து காணும் நாகர் எனும் ஸ்ரீஆதிசேட மூர்த்தி இல்லாத இடமில்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

நாக தோஷம் இருந்தால் குழந்தை பாக்கியம் இல்லாமலும், பிறந்த குழந்தைகள் ஊனமுற்றதாகவும், நோயால் அவதிப்படுவதும், குடும்பத்தினர் பிரிந்தும் பல்வேறு இன்னல்களை அனுபவித்தும் வருவர். இத் துன்பங்களிலிருந்து மீளவும், நல்ல பலன்களைப் பெறவும் நாக தேவதைகளை மனம் உருகி வழிபட வேண்டும். நாக தேவதைகளின் அருளால் தோஷங்கள் விலகி நல்ல பலன்கள் பெறலாம் என்பது ஐதீகம். நாக பஞ்சமி, நாக சதுர்த்தி அன்றோ அல்லது வெள்ளிக் கிழமைகளிலோ நாக சிலைக்கு அபிஷேகம் செய்து, மஞ்சள் – குங்குமத்தினால் பூஜை செய்வதால் நாக தோஷம் நீங்கும். மனம் உருகி வேண்டிப் பிரார்த்தனை செய்து வந்தால், நாக தோஷம், கால சர்ப்ப தோஷம் நீங்கி உன்னதமான வாழ்க்கை அமையும்.



ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தியில் சுமங்கலிகள் விரதம் இருந்து ஆதிசேஷனை வழிபட்டால் வேண்டியது கிடைக்கும். உடல் மனம் நலம் பெறும். சகலவிதமான செல்வங்களையும் பெறலாம். நாக சதுர்த்தி, நாக பஞ்சமி (அ) கருட பஞ்சமி ஆகிய விரதங்களை அவரவர்கள் தங்களது விருப்பம்போல மேற்கொள்ளலாம்.

# நாக வழிபாடு

पाठ : षट्त्रिंशः **ஸம்ஸ்க்ருதம் அறிவோம்** பாடம்-36

1. ते सर्वेपि शमायणं पठन्ति।
அவர்களனைவரும் ராமாயணம் படிக்கின்றார்கள்.
2. यूयं किं लिखथ?
நீங்கள் என்ன எழுதுகிறீர்கள்?
3. एकः वानरः अस्मान् त्रासयति।
ஒரு குரங்கு நம்மை பயப்படுத்துகிறது.
4. अरे युष्मद्गृहे मार्जालं के पोषयन्ति?
அடே! உங்கள் வீட்டில் பூனையை யார் வளர்க்கிறார்கள்.
5. पात्राणि सम्यक् धाव।
பாத்திரங்களை நன்றாகத் தேயுங்கள்.
6. देव एव सर्वान् रक्षति।
கடவுளே எல்லாரையும் காப்பாற்றுகிறார்.
7. अद्य प्रातः त्वं मुखं अक्षाळयः किम्? नो चेत् जनकः त्वां ताडयिष्यति।
நீ காலையில் முகத்தைக் கழுவினாயா என்ன? இல்லையாகில் தந்தை உன்னை அடிப்பார்.
8. घण्टां मा नादय।
மணியை ஒலிக்கச் செய்யாதே(தீர்).
9. वैश्यः धृतं तोलयति
வைசியர் நெய்யை நிறுக்கின்றான்.
10. एकः चोरः मां वञ्चयित्वा मम वस्त्राणि अचोरयत्।
ஒரு திருடன் என்னை மோசம் செய்து என்னுடைய துணிகளைத் திருடினான்.
11. अहं रामाय दश धारयामि।
நான் இராமனுக்காக பத்து ரூபாய் கடனாளியாக உள்ளேன்.
12. किमर्थं बालकम् अधः अपातयः?
எதற்குச் சிறுவனைக் கீழே தள்ளினாய்?
13. रामः जनकं सर्वदा तोषयति।
இராமன் தந்தையை மகிழ்ச்சியுறச் செய்கிறான்.

1. என்னைச் சிரிக்க வைக்காதே.
मां मा हासय।
2. தாய் தம்பியை பால் குடிக்கச் செய்கிறாள்.
अम्बा अनुजां क्षीरं पाययति।
3. பிறகு படுக்க வைப்பது உண்டு.
अनन्तरं शाययिष्यति।
4. இந்த நேரத்தில் நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?
अद्य किं किं पाचयसि।
5. நான் சிறுவர்களைப் படிக்க வைக்கிறேன்.
अहं बालकान् पाठयामि।
6. முதலில் எழுதுங்கள்.
प्रथमं लेखय।
7. நாங்கள் நேற்று உன்னைத் திட்ட வில்லை.
वयं त्वां न दूषयामः।
8. ஆனால் புகழ்கின்றோம்.
परं भूषयामः।
9. எங்களை நீங்கள் எதற்கு தண்டிக்கிறீர்கள்?
अस्मान् यूयं किमर्थं दण्डयन्ति?
10. இந்தச் சொம்பில் நீரைக் கொட்டுங்கள்.
अस्मिन् द्रोण्यां जलं स्थापय।
11. அந்த முதியவரை (காப்பாற்றுங்கள்) வளருங்கள்.
तं वृद्धं पालय।
12. அந்த எருமையைக் காட்டுக்குள் ஓட்டுங்கள்.
तं वृषभं वनाय चोदय।
13. அங்குப் புல்லை மேய விடுங்கள்.
तत्र तृणं खादय।
14. அவளைக் கடிக்க வேண்டாம்.
तं मा मुण्डय।
15. காலத்தைக் கடத்து.
कालं यापयत।
16. என்னுடைய காலைப் பிடி (அமுக்கு).
मम पादं मर्दय।
17. அந்தச் சிறுவனைத் தண்டியுங்கள்.
तं बालकं दण्डय।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

# தனமும் தானமும்




– கு.அரங்கநாதாச்சாரியார்,
வரிச்சிக்குடி.

தனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். பணம் காசுகளையே செல்வம் எனச் சிலர் எண்ணுகின்றனர். உண்மையில் செல்வங்கள் பல உள்ளன. பொருட் செல்வம், நிலச்செல்வம், மாட்டுச் செல்வம், மக்கட் செல்வம், கல்விச்செல்வம், பதவிச் செல்வம் போன்று செல்வங்கள் பல சொல்லப்படுகின்றன.

இச்செல்வங்களால் ஒருவர் பயன் பெறுவதோடு நில்லாது, பிறருக்கும் உதவி நல்கி வாழ்தல்தான் முறையான வாழ்வாகும். "செல்வத்து பயனே ஈதல்" என்பது பழமொழி.திருவள்ளுவரும் புகழ் என்னும் அதிகாரத்தில், *"ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு"* என இயம்புகின்றார்.

எனவே, தனம் உடையவன் தானம் வழங்குதல் வேண்டும். தானங்களில் பலவகைத் தானங்கள் பற்றி அறிந்துள்ளோம். பூதானம், கோதானம், வித்யாதானம், இரத்த தானம், உடல் தானம், உடல் உறுப்புகள் தானம், அன்னதானம், கன்னிகா தானம் முதலியன சிறப்பாகப் பேசப்படுகின்றன.

### 1.பூதானம்

ஒருவர் தனக்குச் சொந்தமான நிலத்தை அல்லது நிலத்தின் ஒரு பகுதியை மற்றவர்க்கு வழங்குதல் பூமிதானமாகும். ஊரின் நன்மைக்காக, கலாசாலை அமைத்தல், மருத்துவமனை அமைத்தல், கிணறு குளம் வெட்ட உதவுதல், முன்வினை காரணமாக நிலம் அளித்தல் போன்றவற்றிற்கும் பூமிதானம் வழங்கப்படும்.

### 2.கோதானம்

கறவைப் பசுவை ஒருவருக்கோ, ஆலயத்திற்கோ வழங்குதல் கோ தானம் ஆகும். நல்ல மனதுடனும் விருப்பத்துடனும் வழங்கப்பட வேண்டும். பெறுபவர் தகுதி உடையவராகவும், பசுவை நன்கு பராமரிப்பவராகவும் இருத்தல் வேண்டும். பசுவினால் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன. பசுவின் சாணமும், கோமியமும் கூட மருத்துவ குணம் உடையவை என்பர்.

### 3.வித்யாதானம்

படைக்கப்பட்ட உயிரினங்களில் மனித உயிரே கல்விச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிய



# ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

36. ஸ்வாமி மணவாள மாமுனிகளுடைய திவ்யமான பாதுகைகளுக்கு இருக்கும் திருநாமம் எது?
 பொன்னடி / பொன்னடியாம் செங்கமலம் / பொன்னடிக்கால் ஜீயர்.

37. நம்முடைய பூர்வாசார்யர்களில் "அபயப்ரதராஜர்" என்ற விருது கொண்ட ஆசார்ய ச்ரேஷ்டர் யார் ?
 பெரியவாச்சான் பிள்ளை.

38. கோதா சதுச்லோகீ, ராமாநுஜ சதுச்லோகி ஆகிய க்ரந்தங்களை அநுக்ரஹித்த ஆசார்யர் யார்?
 திருமலை அநந்தாழ்வான்

39. திருமலையில் ஸ்ரீபாஷ்யகாரரின் திருவடிகளை எந்த திருநாமம் கொண்டு வ்யவஹரிக்கின்றனர்?
 அநந்தாழ்வான்.

40. திருவேங்கடநாதனான ஸ்ரீநிவாசனுக்கு மண் புஷ்பத்தை ஸமர்பித்த பக்தாக்ரேசர் யார்?
 திருகுருவரத்த நம்பி.

41. ஸ்ரீமந் நாதமுனிகள் மற்றும் யாமுனாசார்யர் அவதரித்த திருவவதார ஸ்தலம் எது?
 காட்டுமன்னார் கோவில்.

42. திருமஞ்சன கைங்கர்யத்தில் ஸஹஸ்ரதார ஸமயத்தில் அனுஸந்திக்கப்படும் "விஷ்ணு: சேஷி" என்ற சுலோகம் அநுக்ரஹித்த பூர்வாசார்யர் யார்?
 பெரியவாச்சான் பிள்ளை.

43. பகவத் ராமாநுஜரின் ஜகதாசார்யத்வத்தை நிரூபிக்கும் சரமகுரு நிர்ணயம், சரமோபாய தாத்பர்யம், அந்திமோபாய நிஷ்டை ஆகிய க்ரந்தங்களை அனுக்ரஹித்த ஆசார்யர் யார்?
 சரமகுரு நிர்ணயம் - எறும்பியப்பா
 சரமோபாய தாத்பர்யம் - நாலூராச்சான் பிள்ளை
 சரமோபாய நிஷ்டை - பத்தங்கி பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர்.

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

நிலையில் உள்ளது. மற்ற உயிர்கள் முந்நாளில் இருந்தே வாழ்ந்த வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன . கல்விச் செல்வம் தான் ஒருவரின் வாழ்க்கையில் மாற்றத்தையும் ஏற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. உணவு, உடை, இருப்பிடம், சிந்தனை, ஆட்சி, போக்குவரத்து முதலானவற்றுள் கல்வியால் மாற்றமும் ஏற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன

ஒருவர் தாம் பெற்ற கல்வி அறிவுத் திறத்தால், தான் மட்டுமே வாழ நினைக்காமல், பிறரும் வாழ வகை செய்தல் வேண்டும். விதைக்கப்பட்ட விதை ஒன்று வளர்ந்து, பல மணிகளை அளித்தல் போன்று, கற்றறிந்த அறிஞர் பலரை தோற்றுவித்தல் வேண்டும். இதனால் தான் அரசே கல்விக் கூடங்களை, பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தி கல்விச் செல்வம் வளர ஆவன செய்து வருகிறது. கல்வியில் மேம்பட்ட அறிஞர் பெருமக்களால் தான் உலகம் உயர்கிறது. அதனால்தான் உலகில் குருவிற்கு, ஆசிரியர்க்கு தனி மதிப்பு கொடுக்கப்படுகிறது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்னும் பழமொழி நாம் அறிந்த ஒன்று.

### 4. இரத்ததானம்

குருதிக் குறையால் அவதிப்படும் ஒரு நோயாளிக்கு இரத்த தானம் செய்வது பெரும் புண்ணியமாகும். தகுதியுடைய ஒருவர் இரத்த தானம் வழங்குவது சமுதாயத்திற்குச் செய்யும் ஒரு நல்ல சேவையாகும்.

### 5.உடல் தானம்

உடல் உறுப்புகளைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளவும், செயல்பாட்டு முறைகளை அறியவும் மருத்துவத்துறை முன் நிற்கிறது. அத்தகு அறிவைப் பெற மனித உடல் தேவைப் படுகிறது. இக்கருத்தை உணர்ந்து சிலர் தான் வாழும் போதே, இறந்த பின் உடலை எடுத்துச் செல்ல உடன்பட்டு அறிவிப்புச் செய்கின்றனர். இச்செயல் நிச்சயம் அரிதாகவே காண்கிறோம். இதுவும் ஓர் அரிய சமுதாய சேவையாகும்.

### 6. உடல் உறுப்பு தானம்

விபத்தினாலோ, பிறப்புக் குறைவினாலோ ஒருவர் தம் கண், சிறுநீரகம், எலும்பு போன்ற சில உறுப்புக்கள் பழுதாகி இருந்தால், அவற்றிற்கு

மாற்றாக இன்னொருவர் தம் உறுப்புக்கள் தானமாகப் பெறப்படுகிறது. அவர் தம் செயலும் பாராட்டுக்கு உரியது. உடலிலிருந்து உயிர் நீங்கிய பிறகு, அதன் உறுப்புக்கள் சிலவற்றின் பயன் அறிந்து பிறர் உடலில் பொருத்துவதும் அறிகிறோம். இதுவும் ஓர் அரிய சமுதாய சேவையே ஆகும்.

**7.அன்னதானம்**

எந்த உயிர்க்கும் பிறந்தது முதல் இறப்பது வரை தேவைப்படுவது உணவே ஆகும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என மணிமேகலை கூறும். உடல் வளர்வதற்கும் வாழ்வதற்கும் உணவு இன்றியமையாத ஒன்று. பசிப்பிணி ஒருவரை வாழ்நாள் முழுவதும் பிணிக்கிறது. விலங்குகளும் பறவைகளும் வாழ்வதற்கு உணவு பெற ஒரு நாளில் பல மணி நேரம் செலவிடுகின்றன. நாமும் பணிபுரிந்து பெறும் ஊதியத்தில் பெரும் பகுதி உணவிற்கே செலவிட வேண்டி உள்ளது. உணவின்றி வாழும் ஏழைகள், எளியோர்கள் உணவு பெற உதவுதல் பெரும் புண்ணியமாகும். கோயில் திருவிழாக்களில் கூடும் கூட்டங்களுக்கு அன்ன தானம் செய்தல் அறச்செயலாகும். மங்கல அமங்கல நிகழ்ச்சிகளிலும் அன்ன தானம் செய்வதை நாம் காண்கிறோம் கல்விச்சாலைகளில் கூட இப்பொழுது காலை, மதிய உணவுகள் வழங்கப் படுகின்றன. எனவே அன்னதானம் சிறந்த தானமாகக் கருதப்படுகிறது.

**8.கன்னிகாதானம்**

பெண்ணைப் பெற்று வளர்த்து, உரிய வயதில் சிறந்த மகனைக் கண்டு, அவனுக்கு திருமணம் செய்து கொடுத்தல் தான் கன்னிகா தானம் ஆகும். பெண்ணாக இருப்பவள் பெரும்பாலான நேரத்தைத் தாயோடு கழிப்பதால் பெண்மை இயல்பு நன்கு

## வாழ்வியல் நெறிகள்






*வாளால் மகவு அரிந்து ஊட்டவல்லேன் அல்லன்; மாது சொன்ன*
*சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன்; தொண்டு செய்து*
*நாலாறில் கண் கிடத்து அப்ப வல்லேன் அல்லன்; நான் இனிச் சென்று*
*ஆளாவது எப்படியோ? திருக்காளத்தி யப்பருக்கே!*

– பட்டினத்தார்

பொருள் : வாளினால் பெற்ற பிள்ளையை அறுத்து, இறைவனுக்கு உணவிட்டவர் சிறுத்தொண்ட நாயனார். மனைவி கூறிய சபதத்தால் இளமை இன்பத்தை விட்டு ஒழித்தவர் திருநீலகண்ட நாயனார். ஐந்து நாட்களே தொடர்ந்து திருத் தொண்டு செய்து, ஆறாம் நாளில் தன் கண்ணைத் தோண்டி ஆண்டவன் திருக்கண்ணில் அழுத்தியவர் கண்ணப்ப நாயனார். இத்தகைய ஆற்றல்கள் எதுவும் அற்ற யான் எப்படி காளஹஸ்தி நாதருக்கு ஆட்படுவேன்.

**வாழ்வியலுக்கான கருத்து** : இறைவனுக்காகப் பெற்ற பிள்ளையை அரிதல், இளமை துறத்தல், கண்ணிடந்து அப்புதல் ஆகிய இச்செயல்கள் செயற்கருஞ் செயல்கள் ஆகும். இவை உடலையும், மனைவி, மக்களையும் பொருளாகக் கொண்டுள்ளாருக்கு மிகவும் அரியதாகத் தோன்றும். ஆனால், அவற்றைப் பொருளாகக் கொள்ளாது அவற்றின் மேல் சிறிதும் பற்றின்றி அறிவு மயமாக நிற்போர்க்கு அவை மிக எளிமையாகத் தோன்றும். உலகப் பற்றை ஒழித்து இறைவனை அடைய முடியும்.

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

அமைந்து விடுகிறது. பெண்ணாகப் பிறந்தவள் தாய் தந்தையரை விடுத்து வேறொரு குடும்பத்தில் இணைந்து அக்குடும்பம் சீரோடும் சிறப்போடும் வாழ உறுதுணை ஆகிறாள்.

பெண்ணைப் பெற்றவர்கள் தம் மகளுக்குத் தக்க துணை அமைய வேண்டும் என கவலைப் படுகிறார் கள். முற்றும் துறந்த ஜனகர் கூட தம் வளர்ப்பு மகளாகிய சீதைக்கு ஏற்ற வரன் அமைய வேண்டுமே எனக் கவலைப்பட்டதாக அறிகிறோம். இல்லறம் சிறக்க வேண்டுமானால் நல்ல இல்லாள் அமைய வேண்டும். கணவனின் கையைப் பற்றுதல் திருமணத்தில் முக்கிய நிகழ்ச்சியாகும். இராமன் சீதையின் கையைப் பற்றிய பொழுது, ஜனகர் இயம்பிய சொற்கள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவை.

இராமா! என் மகள் சீதை உன் நிழலாக, நீ செய்யும் தர்மங்களுக்கு இசைவாக பதிவிரதையாக எப்பொழுதும் இருப்பாள் என ஜனகர் கூற்றுப்படி பெண்ணின் கடமை உணர்த்தப்படுகிறது.பெண் சக்தி வடிவம் எனப் போற்றப்படுகிறாள்.அச்சக்தி கொண்டு ஒரு குடும்பத்தை வாழ்விக்க வேண்டும் என்பதற்காகவே கன்னிகா தானம் நிகழ்கிறது. இன்னும் ஸ்வர்ணதானம், வஸ்திரதானம், உதக தானம் (தண்ணீர் ) போன்று பலதானங்கள் உள்ளன.

தி. தி. தேவஸ்தானம் ஆகம முறைப்படி வேங்கடவனுக்கு எல்லா வழிபாடுகளும் செய்வ தோடு, தரிசிக்க வரும் பக்தர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

பக்தர்கள் எவரேனும் நோயுற்றால் உடன் மருத்துவ வசதி பெற மருத்துவமனை செயல் படுகிறது. வேதக் கல்வி முதலான கல்வி பெற கலாசாலைகள் இயங்குகின்றன. பிணிகளிலேயே கொடிய பிணியாகிய பசிப்பிணியைப் போக்க நாள்தோறும், நாள் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. பசுக்களைப் பராமரிக்க கோ சாலைகள் அமைத்ததுடன், அப்பசுக்களால் பெரும் பொருட் கள் கொண்டு, பல்வேறு நலம் தரும் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கிறது. அறநிலையத் துறையால் அறம் வளர்வது கண்டு எம்பெருமான் மகிழ்வான் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் அவன் புன் சிரிப்போடு எங்கும் சேவை தருகிறான்.

இங்ஙனம் பல்வேறு தானங்கள் உலகில் நிகழினும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு தானம் உள்ளது. அதுதான் நிதானமாகும். வாழ்வின் எல்லோருக்கும் எப்போதும் வேண்டுவது நிதானமே ஆகும். இந்த நிதானம் தான் வாழ்வில் செம்மையாய் வாழ வழி செய்யும். நிதானிப்போம். நலம் பெறுவோம்.

## ஸப்தகிரி மே 2025 விடைகள்

1. அநந்தாழ்வான்.
2. இராமாநுஜர்.
3. ஸ்ரீகோவிந்த பகவத்பாதர்.
4. வேதாந்த தேசிகர்.
5. மைத்ரேய மகரிஷி.
6. இராமாநுஜர்.
7. நித்ய கல்யாண பெருமாள்.
8. ஸ்ரீராமர்.
9. கல்யாண விமானம்.
10. அனுமன்.
11. திருக்கச்சி நம்பிகள்.
12. பாரதியார்.
13. சிவகுரு, ஆர்யாம்பாள்.
14. அநந்தாழ்வான்.
15. திருவேங்கடமுடையான்.



## போட்டி எண். 34




**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி கே.பி.சம்யுக்தா, தடாகம் சாலை, கோவை.
2. செல்வி எஸ்.ஸ்ரேயா அத்வைத ஆசிரமம் சாலை, சேலம் மாவட்டம்.
3. செல்வி தேவரதி சத்யமங்கலம், ஈரோடு மாவட்டம்.






சங்கு சக்கரம் என்றவுடன் நம் நினைவில் ஒளிர்வது காக்கும் கடவுளான தாயார் ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் பாம்பணையில் சயன கோலத்தில் பாற்கடல் வாசனாக எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நாராயண மூர்த்தி திருவடிவமாகும்.

சங்க காலத்தில் பாலை நில மக்களால் போர்க்கடவுளாக வணங்கப்பட்ட தெய்வம் சங்கு சக்கரம் ஏந்தியருளும் கொற்றவை எனும் துர்க்கை ஆவாள். சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள திருமால் மற்றும் துர்க்கை மூர்த்தங்களை சில ஆலயங்களில் மூல மூர்த்தியாகவும், பல ஆலயங்களில் பரிவார மூர்த்திகளாக வும் தரிசனம் செய்யலாம் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

பலரும் அறியாத தமிழக அளவில் சங்கு சக்கரம் ஏந்தியருளும் சில இறை வடிவங்களைப் பற்றி அறிவோம்.

திவ்ய தேசங்களில் ஒன்றான தஞ்சை மாவட்டத்தில் திருவெள்ளியங்குடி – அருள்மிகு ஸ்ரீமரகதவல்லித் தாயார் சமேத ஸ்ரீகோலவில்லி ராமர் திருக்கோயிலில் மேற்கு திசைக் காணும் வண்ணம் சதுர்புஜங்களுடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீகருடாழ்வார்(1) மற்ற திவ்ய தேசங்களில் இல்லாத கோலத்தில் இத்தலத்தில் மட்டுமே சங்கு, சக்கரத்துடன் காட்சி தருகிறார்.

இதேபோல் சோளிங்கபுரம் எனும் திவ்ய தேசத்தில் அனுமன் சங்கு சக்கரத்தோடு காட்சி அளிப்பது கூடுதல் சிறப்பாகும்.

சிவாலயங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள இறை வடிவங்கள் தேவாரப் பாடல் பெற்ற தலமான திருஅரிசிற்கரைப்புத்தூர் அருள்மிகு ஸ்ரீஅழகாம்பிகை சமேத ஸ்ரீபடிக்காசுநாதர்(3) திருக்கோயில் மற்றும் கோவில் தேவராயன் பேட்டை (திருச்சேலூர்) அருள்மிகு ஸ்ரீசுகந்த குந்தாளாம்பிகை சமேத மச்சபுரீஸ்வரர்(4) திருக்கோயில்களின் வளாகத்தில் கிழக்கு திசை காணும் வண்ணம் தனி சன்னதி கொண்டு அருள்மிகு ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வானை சமேத சங்கு சக்கரத்துடன் ஸ்ரீமுருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார்.

மேலும், கும்பகோணம் அருள்மிகு மந்திரபீடேஸ்வரி ஸ்ரீமங்களாம்பிகை சமேத ஸ்ரீஆதிகும்பேஸ்வரர் ஆலய முதல் பிரகாரத்தில் சங்கு சக்கரம் ஏந்தியுள்ள கோலத்தில் வடக்கு திசை காணும் வண்ணம் ஸ்ரீவிக்ன விநாயகப் பெருமான்(5) எழுந்தருளியுள்ளார்.

மேற்கூறிய தலங்களில் சோளிங்கபுரம் தவிர்த்து மற்ற நான்கு ஆலயங்களும் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# சங்கு சக்கரம் ஏந்திய இறைவடிவங்கள்



–படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 9443171383

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

(பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே) எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்யும்போது போதாயன வ்ருத்தி க்ரந்தத்தைத் திருவுள்ளத்தில் தரித்திருந்து, அவருக்கு உசாத்துணையாக இருந்தவர் கூரத்தாழ்வானாவர். அதாவது வேத வியாஸ பகவான் எழுதிய ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு போதாயன முனிவர் மிகவும் விளக்கமாக எழுதிய வ்ருத்தி என்றும் உரை நூல் எம்பெருமானார்க்கு ப்ரஹ்ம ஸூத்ர வ்யாக்யானமாகிய ஸ்ரீபாஷ்யம் எழுதுவதன் பொருட்டுத் தேவைப்பட்டது.

அதற்காக அவர் காசியில் உள்ள புஸ்தகாலயத்துக்கு ஆழ்வானோடு எழுந்தருளி வ்ருத்தியை வாங்கி, பாதி பாதியாகப் பிரித்துக் கடாக்ஷித்தபோது. ஆழ்வான் உடையவர் கடாக்ஷியாத பாதிப்பாதிப் பகுதியைத் தாம் பார்த்து மனத்திலே தரித்துக் கொண்டிருந்து, திரும்பி ஸ்ரீரங்கத்துக்கு உடையவரோடு எழுந்தருளி, அவர் ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்யும்போது உடையவருக்கு ஸ்ரீபாஷ்யத்தின் உட்பொருளைப் பகர்ந்து, அவர் திருவுள்ளத்தில் மிகுந்த சந்தோஷத்தை உண்டு பண்ணினார் என்ற சரித்திரம் இங்கு நினைத்தற்பாலதாகும்.

வேத வ்யாஸரின் பிரம்ம ஸூத்ரத்துக்கு இராமாநுசர் அருளிய உரைநூலான ஸ்ரீபாஷ்யம் எழுதும்போது அதன் உட்பொருளை அவர் உணரும்படி அவருக்கு உதவி செய்து, அந்த உரைநூல் காலமெல்லாம் நிலைக்கும்படி தன் குமாரர்களான பராசரபட்டர், வேதவ்யாஸ பட்டர் ஆகியோர்க்கு பாஷ்யத்தின் உட்பொருளைச் சொல்லுவித்தவர் வாழியே!

(நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே) புறச்சமயிகளை வெல்லுவதைக் குறித்து கூரநாத பஞ்சாஸத் என்ற ஸ்தோத்ரத்தில் 15, 17, 18 சுலோகங்களில் அநுபவிப்பது காணலாம். சிவனே பரம்பொருள் என்ற கொள்கையைத் தெரிவிக்கும் சைவாகமத்தைப் பிரமாணமாகக் கொண்ட சிலர், ஆழ்வான் எதிரில் வாதத்துக்கு வந்தார்கள். அவர்களை வெல்லத்தக்க தமது பேச்சுக்களால் அவர்களை வென்று அவர்களது சைவாகமப் பயிற்சியைப் பயனற்றதாக ஆக்கிவிட்டார் ஆழ்வான். மேலும், உலகம் பொய் என்பதை மறுக்கிற அறிவை வெளிப்படுத்துகின்ற தம்முடைய யுக்திகளாலே உலகம் பொய் என்கிற அந்த அத்வைத மதத்தைப் பொய்யாக மறுத்து, ஆத்மாக்களுடைய பன்மையை வெளிப் படுத்தினார். ஆத்மாக்கள் பகவானுக்கு அடிமை அல்ல என்பதை மறுத்துரைத்தார். அவ்வாறே மதத்தைக் கண்டிக்கும் போது உலகைப் படைத்த ஈஸ்வரனாகிய நாராயணன் விஷயத்தில் வேதத்தை அசைக்க முடியாத அத்தாட்சி நூலாக

அப்பிள்ளை அருளிய
ஆழ்வார் ஆசார்யர்கள்
வாழித்திருநாமமும் உரையும்

# கூரத்தாழ்வான்

- ஸ்ரீ உ.வே. டாக்டர்
மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972



ஒப்புக்கொண்டு வைசேஷிகர்களால் சொல்லப்பட்ட படைப்பு செய்பவனான சிவன், அனுமான ப்ரமாணத்தினால் ஸித்திக்கிறான் என்ற விஷயத்தைக் கீழே தள்ளுகிறவராயும், பரமாணுவுக்கு உலகைக் குறித்து முதல் காரணமாய் இருந்தமையும், தமது பேச்சுக்களாலும் யுக்திகளாலும் மறுத்தார்.

இவ்வாறு ஸ்ருதி வாக்யங்களை த்ருடமான பிரமாணமாகக் கொண்டும். இதற்குத் தக்க யுக்திகளைக் கொண்டும், ஆழ்வான் உலகிற்கு முதற்காரணம் பரமாணுவன்று. அதற்கு நிமித்த காரணம் சிவனுமன்று, நாராயணனே உலகுக்கு முதற்காரணமும் நிமித்த காரணமும் ஆகிறான் என்று நாராயண சமயத்தை நிலை நாட்டினார். இதற்கு ஏற்ப நடந்த வரலாற்றை அறிதல் வேண்டும். இராமாநுசர் காலத்தில் இருந்த கிருமி கண்ட சோழன் என்னும் அரசன் ஒருவன் வீர சைவனாகையாலே சைவாகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு சிவனே பரம் பொருள், அவனை விட உயர்ந்த பொருள் இல்லை என்று ஓலையில் எழுதிக் கையெழுத்திடும்படி பல பண்டிதர்களை நிர்ப்பந்தித்து பயமுறுத்தியும், நிலம், பொருள் ஆகியவற்றைக் கொடுத்தும் அவர்களின் கையெழுத்திடப் பெற்றுப் பரதத்வ நிர்ணயம் செய்து விட்டோம் என்று இறுமாந்திருந்தான்.

அவனிடம் வேலை செய்யும் நாலூரான் என்பவன் இராமாநுசர் கையெழுத்திட்டால் அன்றோ அவ்வார்த்தை உண்மையாவது என்று கூற, அந்த அரசன் இராமாநுசரை அழைத்து வரச் செய்தான். ஏவலாளர்கள் ஸ்ரீரங்கம் சேர்ந்து மடத்து வாசலிலே வந்து, இராமாநுசர் எங்கே? என்று கேட்க, கூரத்தாழ்வான் இராமாநுசர் திருமேனியைக் காப்பாற்ற எண்ணி, நீராட எழுந்தருளியிருந்த அவருடைய திரிதண்டம். காஷாயம் முதலானவற்றை தாம் தரித்துக் கொண்டு தாமே இராமாநுசராகச் சென்றார். சோழன் வழக்கப்படியே சிவாத் பரதரம் நாஸ்தி என்று எழுதி கையொப்பம் இடும்படி சொல்ல. அதை எழுதாமல் குருணிக்கு மேலுண்டு, அதுக்கு மேலே பதக்கும் உண்டு. அதுக்கு மேலேயும் அதிகமுண்டு என்று எல்லார்க்கும் கேட்கும்படி கோஷித்து, "த்ரோணமஸ்தி தத: பரம்" என்று எழுதிக் கையெழுத்து இட்டருளினார். இத்தைக்கேட்டு அரசனும் கோபம் கொண்டவனாய், என் முன் நீர் இப்படி எழுத்திடுகையாலே கொடிய தண்டனை கொடுக்க வேணும். நீர் பிராம்மணராகையாலே கொல்லத் தக்கவரன்று. உமக்குத் தண்டனை கண்ணைப் பிடுங்குதல் என்று சொன்னான். ஆழ்வானும் உடனே குத்ருஷ்டிகளையும் உன்னையும் பார்த்த மாம்ஸ கண்ணுக்கு நீ சொன்னதுவே தண்டனை.

அதுவே நமக்கு விருப்பம் என்று தன் திருக்கைகளாலே கீண்டு கொண்டு வாழாட்பட்டுள்ளீரேல் என்கிறபடியே பகவத் விட்டுக்களாயிருக்கிற இந்த நீச கோஷ்டியில் பகவத் பரராய் இருப்பார் ஒருவராகிலும் இல்லையோ என்று ஆராய்ந்து வர. அப்போது ராஜாவுக்கு உடை வாள் எடுப்பாள் ஒரு பெண்பிள்ளை, வாளை அவன் முன்னே பொகட்டு அரசே! அடியேன் விடை கொள்ளுகிறேன் என்று ஆழ்வானுக்குக் கை கொடுத்து உதவினாள். இவ்வாறு நாராயண சமயத்துக்கு தம் கண்ணைக் கொடுத்து காப்பாற்றினார். ஆகையாலே நாராயணன் சமயம் நாட்டியபடி அப்படிப்பட்டவர்க்கு பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்...

## 2025, ஆகஸ்ட் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 04-07 | திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 06 | துளசி மாஹாத்மியம். |
| 06-08 | கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 07-09 | தொண்டைமான்புரம் ஸ்ரீபூ சமேத ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 08 | வரலக்ஷ்மி விரதம். |
| 09 | ஹயக்ரீவ ஜெயந்தி, ஸ்ரீவிகனச ஜெயந்தி. |
| 10 | காயத்ரி ஜபம். |
| 15 | இந்திய சுதந்திர தினம். |
| 16 | ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி, கோகுலாஷ்டமி. |
| 19-20 | கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 25 | ஸ்ரீவராஹ ஜெயந்தி, பலராம ஜெயந்தி. |
| 27 | விநாயக சதுர்த்தி. |
| 28 | ரிஷி பஞ்சமி. |




# பூபாரம் தீர்க்கத் துணை புரிந்த ஷண்முகரும் சிவபெருமானும்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 94861 39685

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களிலும் தர்மம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து அதர்மம் தலைதூக்குகின்றது.

அதர்மத்தையே மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ள கலியுகத்திற்கு முந்தைய யுகமாகிய துவாபர யுகத்தின் இறுதிப் பகுதியில் தலைதூக்கிய பாவச் செயல்கள் அளவின்றிப்போனதால் சகல ஜீவராசிகளையும் தாங்கி நின்ற பூமாதேவி பாரம் தாங்காமல் மூச்சுத் திணறத் தொடங்கினாள்.

முன்பு இரண்யாக்ஷனால் மகசமுத்திரத்தின் அடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பூமா தேவியை வராக உருவமெடுத்துக் காப்பாற்றிய எம்பெருமான் தனது ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் பாவங்களின் பாரம் தாங்காமல் தவிக்கின்ற பூமாதேவியின் பாரத்தைக் குறைத்து அவளுக்கு ஆசுவாசம் அளிக்கவே மகாபாரதப்போரை அரங்கேற்றினான் என்பது பெரியோர்களின் திருவுள்ளக் கருத்தாகும்.

பஞ்சபாண்டவர்களின் சார்பில் கௌரவர்களிடம் சமாதானம் பேசுவதற்காக ஸ்ரீகிருஷ்ண பகவான் தூது சென்றாலும் கூட, மகாபாரதப் போர் நடந்து, அப்போரில் எண்ணிலடங்காத வீரர்கள் வீர மரணமடைந்து அதன்மூலம் பூபாரம் குறைய வேண்டும் என்பதல்லவோ அப்பெருமானின் திருவுள்ளமாக இருந்தது?

இவ்வுண்மையைச் சிக்கெனக் கண்டு கொண்டு சகாதேவன்,

*"நீபாரத அமரில் யாவரையும் நீறு ஆக்கிப்*
*பூபாரம் தீர்க்கப் புரிந்தாய்! புயல்வண்ணா!*
*கோபாலா! போர் ஏறே! கோவிந்தா! நீ இன்றி*
*மாபாரம் தீர்க்க மற்று ஆர் கொல் வல்லாரே?"*

என்று ஸ்ரீகண்ணபிரானைப் புகழ்ந்துரைத்தான். பாண்டவர்கள் பக்கத்தில் ஏழு அக்ஷௌகிணி என்ற எண்ணிக்கையிலான சேனையும், கௌரவர்கள் பக்கம் பதினோரு அக்ஷௌகிணி சேனையும் அம்மஹாபாரதப் போரில் பங்கேற்றன. மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்கள், கௌரவர்கள் ஆகிய இரண்டு தரப்புகளிலும் பதினெட்டு அக்ஷௌகிணி அளவுள்ள சேனைகளைச் சேர்ந்த 39,36,600 வீரர்களும், எண்ணற்ற யானைகளும், குதிரைகளும் மடியநேர்ந்தது.

யுத்தத்தின் இறுதியில் பாண்டவர்கள் தரப்பில் எண்மரும், கௌரவர்கள் தரப்பில் நால்வரும் ஆக மொத்தம் பன்னிரண்டு பேர் மட்டுமே உயிர்பிழைத்தனர் என்பதை அறியும்பொழுது, பூமியின் பாரம் உண்மையாகவே குறைந்திருக்கும் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திற்கு முந்தைய அவதாரமாகிய ஸ்ரீராமாவதாரத்தில் "தீயோரை அழித்து, நல்லோரைக்

காப்பதாகிய" தர்மத்தை ஸ்ரீராமபிரான் நடத்திக் காட்டுவதற்கு உறுதுணையாக ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் (ஸ்ரீசீதா தேவியார்), நித்திய சூரிகளுள் ஒருவராகிய ஆதிசேஷன் (லட்சுமணன்), பஞ்சாயுதங்களில் ஒன்றாகிய சங்கு (பரதன்), சக்கரம் (சத்ருக்னன்), வாயுபகவான் (ஸ்ரீஆஞ்சநேயர்), சூரியபகவான் (சுக்ரீவன்) என்று பலரும் இப்பூவுலகில் ஒவ்வொரு பிறப்பெடுத்து வந்து ஸ்ரீராமகாரியத்தில் துணை நின்றதாக ஸ்ரீமத் ராமாயணம் கூறுகின்றது.

ஸ்ரீராமபிரானுக்கு வியத்தகு அஸ்திரங்களை வழங்கிய விசுவாமித்திரர், கோதண்ட வில்லை அருளியதுடன் ஸ்ரீஆதித்திய ஹ்ருதயத்தையும் அவருக்கு நல்லுபதேசம் செய்த அகஸ்தியர் போன்ற முனிவர்களும் கூட ஸ்ரீராமகாரியத்தில் துணை நின்றனர்.

இவ்வழியில் நோக்கும் பொழுது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் துவாபரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்து பூபாரம் தீர்க்க முனைந்த பெருமுயற்சி களுக்கு மும்மூர்த்திகளுள் ஒருவராகிய சிவபெருமா னும், அவருடைய திருக்குமாரராகிய சுப்ரமணியரும் துணை நின்று உதவியதை ஸ்ரீமஹாபாரதமென்னும் மகத்தான இதிகாசம் கோடிட்டுக் காட்டுகின்றது.

பிதாமகர் பீஷ்மாச்சாரியார், துரோணாச் சாரியார் ஆகிய நல்லவர்களும், சந்தர்ப்ப சூழ்நிலையால் மகாபாரத யுத்தத்தில் தீயவனாகிய துரியோதனின் பக்கம் நிற்க வேண்டியதாயிற்று.

அவர்களுள், மகாபாரதப் போரில் கௌரவர் சேனைகளுக்குத் தலைமை தாங்கிய பீஷ்மர் யாராலும் வெல்லப்பட முடியாத அதிரதர் ஆவார். யுத்தகளத்திலிருந்து பீஷ்மரை அகற்றினால் மட்டுமே பாண்டவர்களால் வெற்றியை நோக்கி அடுத்த அடியை எடுத்து வைக்க முடியும் என்ற நிலையில் ஷண்முகர், சிவபெருமான் இருவரின் திருவருளும் அதற்குக் காரணமாக அமைந்ததை மகாபாரதத்தின் முற்பகுதி நமக்கு உணர்த்துகின்றது.

பிரம்மச்சரிய விரதம் ஏற்றிருந்த பீஷ்ம ஆசாரியார் தம்முடைய தம்பி விசித்திர வீரியனுடன் மணமுடிப்பதற்காக காசிராஜன் மகள்களான அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூன்று கன்னிகைகளையும் சுயம்வர மண்டபத்திலிருந்து கவர்ந்து வந்தார். அவர்களுள் மூத்தவளாகிய அம்பை சால்வன் என்பவனைத் தான் விரும்புவதாகக் கூறவே பீஷ்மரும் அவளை சால்வனிடம் அனுப்பி வைத்தார். ஆனால், பீஷ்மரால் அழைத்துச் செல்லப்பட்டவளைத்






**சேஷ க்ஷேத்திரத்தில் உறங்காப்புளி :**

ஆதிசேஷனே ராமாவதாரத்தில், அவரது தம்பி லட்சு மணனாக வந்தார். (கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாகப் பிறந்தார். ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் தங்கி இருந்த புளியமரமாக அவதாரம் செய்தவரும் ஆதிசேஷனே. ஸ்ரீஉடையவராக வந்தவரும் அனந்தனே.

எம்பெருமான் எங்கே சென்றாலும் ஆதிசேஷனை விட்டுப் பிரிய மாட்டார். அப்படியொரு அந்நோன்யம் இருவருக்கும் உண்டு. அதனால்தான் நம்மாழ்வாராக எம்பெருமான் அவதரிக்க விருப்பம் தெரிவித்தபோது, அனந்தனை உடனே நீ சென்று பூவுலகத்தில் புளிய மரமாக நின்று கொள். நான் அங்கே வந்து அந்த மரப்பொந்தில் வாசம் செய்வேன் என்று வாக்குறுதி அளித்தார். அப்படியே செய்தும் காட்டினார். அதனால்தான் நம்மாழ்வார் அவதார தலமாகிய ஆழ்வார் திருநகரி எனப்படும் திருக்குருகூர் இன்றும் கூட சேஷ க்ஷேத்திரம் அதாவது ஆதிசேஷன் இருப்பிடம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. இந்த க்ஷேத்திரத்தில் ஆதிசேஷன் புளிய மரமாக இருக்கிறார்.

## தெரிந்து கொள்வோமா...



ஸ்ரீசுதர்ஸனர்

* ஸ்ரீசுதர்சனரை வழிபட சித்திரை நட்சத்திரம் உகந்தது.
* சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஷோடசாயுத ஸ்தோத்திரமும் பாராயணம் செய்தால் ஸ்ரீசுதர்சனரின் பூரண அருள் கிட்டும்.
* சக்கரத்தானை திருவாழியாழ்வான் என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.
* சுவாமி தேசிகன் இவரை "சக்ர ரூபஸ்ய சக்ரிண:" என்று போற்றுகிறார். அதாவது திருமாலுக்கு இணையானவர் என்று பொருள்.
* கும்பகோணம் சக்ர படித்துறையில் உள்ள சக்கர தீர்த்தத்தில்தான் பிரம்மா அவப்ருத நீராடல் செய்து யாகம் செய்தார். உடனே பாதாளத்திலிருந்து சக்கரம் வெளிக் கிளம்பி மேலே வந்து அந்த சக்கரத்தின் நடுவில் பிரம்மனுக்கு அன்று காட்சி தந்த ஸ்ரீமந்நாராயணன்தான் இன்று நமக்கு ஸ்ரீசக்ரபாணியாகக் காட்சி தருகிறார்.
* சாளக்கிராமங்களில் சுதர்சன சாளக்ராமம் மிகச் சிறந்தது.
* ஸ்ரீசக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள ஸ்ரீநரசிம்மரையும் வணங்கி பிரதக்ஷணை செய்தால் நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும், அஷ்ட லக்ஷ்மிகளையும், எட்டுத் திசைகளையும் வணங்கிய பலன் கிட்டும். 16 வகையான பேரருளும் கிடைக்கும்.
* சக்கரத்தாழ்வார் ஸ்ரீரங்கம், காஞ்சி வரதர் கோயில், திருமாலிருஞ்சோலை, திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர் எனப் பல பழமையான திருக்கோயில்களில் தனிச் சன்னதி கொண்டு காட்சியளிக்கின்றார்.

திரு. அசோக்ராஜா, திருச்சி, 97503 33265.

தன்னால் மணக்க இயலாது என்று சால்வன் மறுத்து விட்டான். தன்னுடைய காதலனை மணக்க இயலாததால் மிகவும் கோபம் அடைந்த அம்பை பீஷ்மரைக் கொல்வதாகச் சபதம் ஏற்றாள். இதற்காக ஷண்முகப் பெருமானை நோக்கித் தவமிருந்த அம்பைக்கு அவரிடமிருந்து என்றும் வாடாத தாமரை மாலை ஒன்று கிடைத்தது. அதனை துருபதராஜனின் அரண்மனை வாசலில் மாட்டிவிட்டு சிவ பெருமானை நோக்கித் தவம் புரிய ஆரம்பித்த அம்பைக்கு "நீ உனது அடுத்த பிறவியில் பீஷ்மரை அழிப் பாய்'' என்று சிவபெருமான் வரம் கொடுத்தார். தன்னுடைய அடுத்த பிறவியில் துருபத ராஜனின் மகளாகப் பிறந்த அம்பை தான் முற்பிறவியில் வைத்துச் சென்ற தாமரை மாலையை அணிந்தவுடன் ஆணாக மாறிச் சிகண்டி என்ற பெயரைப் பெற்றாள். ஸ்ரீகிருஷ்ண பகவானின் திட்டப்படி, மகாபாரத யுத்தத்தில் அர்ஜுனனுடைய தேரில் சிகண்டியும் ஏற்றிக் கொள்ளப்பட்டாள். இறுதியில், பெண்களை எதிர்த்துப் போர் செய்வ தில்லை" என்ற விரதம் பூண்ட பீஷ்மர் அன்றைய போரில் வீழ்த்தப்பட்டார்.

### குறுக்கெழுத்துப்புதிர் 108க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | ன | 2 ம | ய் | யா | ர் | 3 ஜ | னு | மா | ரா | 4 ஸ்ரீ |
| | | | யூ | | ரி | 5 ம | ன | | | கை | சை |
| 6 து | லா | பா | ர | ம் | கூ | ரு | க | | 7 ந | ங் | ல |
| 8 பி | | ம் | வ | | த் | த் | ர் | 9 வி | ர | க | ர |
| ர | 10 பூ | ர | ல் | லை | ந் | து | | து | கா | ச | ங் |
| ம் | தே | வ | லி | தி | 11 ச | வ | ன் | ர | சூ | கா | 12 கா |
| மோ | 13 வி | ஸ் | வா | 14 மி | த் | தி | ர | ர் | ர | 15 ஆ | ச் |
| ச் | மா | மே | ர் | ம | ரா | சு | ர | 16 ப | ன் | | சா |
| ச | ம் | 17 ரா | 18 மி | ரு | க | ண் | டு | ரி | ஷி | | ரி |
| வ | ர | ன் | | ர் | வா | ழ் | யா | கை | ய் | 19 பொ | யா |
| ம் | 20 பி | 21 க | ங் | கை | | 22 ஆ | ள | வ | ந் | தா | ர் |
| லி | ழ | 23 கு | ர் | வா | ல | 24 ஏ | | ர் | த | ர | 25 நா |

இது மட்டுமா? பாண்டவர்கள் வன வாசம் செய்த காலத்தில், எதிர்காலப் போர்களில் வெற்றி கிட்டுவதற்காகச் சிவ பெருமானிடம் இருந்து பாசுபதாஸ்திரத்தினைப் பெறுவதற்காகக் கிளம்பினான்.

அடர்ந்த வனத்தினுள் சென்று கொண்டிருந்த அர்ஜுனனின் பார்வையில் ஒரு காட்டுப்பன்றி படவும் அதன் மீது ஓர் அம்பை எய்தான். அதே சமயம் வேறொரு திசையிலிருந்து வந்த அம்பு ஒன்றும் அப்பன்றியின் உடலில் தைத்தது. வேடனின் வில்லிலிருந்து வந்ததே அந்த அம்பு.

“யாருடைய அம்பு முதலில் அந்தப் பன்றியைக் கொன்றது? என்ற வாக்குவாதம் மூண்டதில் அந்த வேடனும், அர்ஜுனனும் ஆக்ரோஷமாகச் சண்டையிடலானார்கள். வில் – அம்பு, கத்தி ஆகியவற்றால் அவ்வேடனை வெல்ல முடியாமல் திகைத்த அர்ஜுனன் இறுதியில் மல் யுத்தம் செய்ய முயன்றான். மல்யுத்தம் தொடங்கியவுடன் அவ்வேடனின் திருமேனியில் தனது தேகம் பட்டதால் சிலிர்த்துப் போன அர்ஜுனன், வேடன் உருவில் வந்திருப்பது சிவ பெருமானே என்பதை உணர்ந்து அவரது திருவடிகளில் விழுந்து நடந்ததற்கெல்லாம் மன்னிப்புக் கோரினான்.

சிவபெருமானின் திருமேனி ஸ்பரிசத்தினால் அர்ஜுனன் தேசும் மேலும் வலுவும், பொலிவும் அடைந்ததுடன் எவரையும் வெல்லும் பாசுபதாஸ்திரத்தையும் சிவபெருமானிடமிருந்து அவ்வர்ஜுனன் பெற்று மகிழ்ந்தான். மகாபாரத யுத்தத்தில் அர்ஜுனன் காட்டிய வீரதீர சாகசங்களுக்குச் சிவபெருமான் அவருடைய திருக்குமாரராகிய ஷண்முகரும் துணை நின்றது நமது நெஞ்சங்களை நெகிழ்விக்கின்றது.

தொடர்ந்து அலசுவோம்...



# ஆடி மாதத்தில்...

வருடத்தின் எல்லா மாதங்களுமே சிறப்பு வாய்ந்தவை என்றாலும் ஆடி மாதம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. இம்மாதம் தான் தட்சிணாயணம் தொடங்கும் மாதம்(சூரியன் தென்திசை நோக்கி நகரும் காலம்). அக்காலத்தில் பல சூட்சும சக்திகள் வெளிப் படுகின்றன. அதோடு நல்ல கதிர் வீச்சுகளும் ஏற்படுகின்றன. அதனால் ஆடி மாதத்தில் கோயில் வழிபாடு பழக்கத்தை ஏற்படுத்தினர். அப்போதுதான் நுண்ணிய சக்திகள் இறைசக்தியோடு கலந்து நம் உடலுக்கும் மனதுக்கும் நல்ல ஆரோக்கியத்தை வழங்கும். அம்மன் மாதம், சக்தி மாதம் எனப் போற்றப்படும் இந்த ஆடி மாதத்தில்தான் ஈசுவரனின் சக்தி, அன்னை லோகநாயகியின் சக்திக்குள் ஐக்கியமாவதால் அம்மனை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

செவ்வாயும், வெள்ளியும் அம்மனுக்கு உகந்த நாட்கள். அதோடு ஆடி மாதமும் சேர்ந்து விட்டால் இவ்விரண்டு நாட்களுக்கும் சிறப்புத் தன்மை அதிகமாகி விடுகிறது. சாதாரண நாட்களில் இருக்கும் விரதத்தைப் போல பலபல மடங்கு பலன் தருகிறது ஆடி மாத செவ்வாய்க்கிழமை விரதம். ஆடி செவ்வாய்க் கிழமைகளில் எண்ணெய் தேய்த்து, மஞ்சள் பூசிக்குளித்து விரதம் இருந்தால் அன்னை உமையவள் கேட்ட வரம் தருவாள் என்பது ஐதீகம். இந்த விரதம் இருந்தால் வீட்டில் அமைதி என்றும் நிலவும். எண்ணெய் தேய்த்துக் குளித்து அம்மனை நினைத்து கூழ் ஊற்றி, தானும் அக்கூழையே உண்பதால் செல்வம், ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் என அம்மன் அருளுவாள்.



ஆடிமாதத்தில் பூதேவியான ஸ்ரீஆண்டாள் பூரம் நட்சத்திரத்தில் அவதரித்தாள். ஆண்டாள் சாத்துமுறை அனைத்து வைணவ ஆலயங்களில் விஷேசமாகக் கொண்டாடப்படுவது வழக்கமாகும். திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் பத்து நாட்கள் ஆண்டாள் திருவாடிப்பூர உற்சவம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு : புலவர் க.சுகுமாரன், மன்னார்குடி,

# ஆலமரம்

நம் தேசிய மரமாக விளங்கும் இந்த ஆலமரம் மருத்துவ குணங்கள் நிறைந்த தெய்வீக மரம். தேவர்களின் ஜடை போன்று விளங்குவதால் ஜடால எனவும், நிறைய விழுதுகளைக் கொண்டதால் "வட" என்றும், அகலமாக வளருவதால் "ந்யகோதா" என்றும், நிழலை கொடுப்ப தால் "மஹாச்சாயா" எனவும்,சிவப்பு நிற பழங்கள் இருப்பதால் "ரக்தமலா" என்றும் அழைக்கப்படுகிறது.

ஆலமர விழுதுகளை நன்கு காய வைத்து சுட்டுப் பொடியாக்கி ஆறியபின் ஜலித்து வைத்துக்கொண்டு நாள்தோறும் 2 வேளை தகுந்தளவு பொடியை எள் எண்ணெயுடன் கலந்து பூசினால் மூலவியாதி வலி நீங்கும்.

நாள்தோறும் நூல்துணியை ஆலமரப் பாலில் நனைத்து இடுப்பின் மீது போட்டு விட்டு காலையில் எடுத்தால் இடுப்பு வலி நீங்கும்.

வேளைக்கு 2 கிராம் ஆலமரப் பட்டைப் பொடியை 50 மி.லி. அரிசி கழுவிய நீரில் கலந்து உட்கொண்டால் எவ்வித வயிற்றுப் போக்கும் குறையும்.

நாள்தோறும் ஒரு முறை இளைய தாக உள்ள ஆலமர விழுதுகள், ஆயுர் வேத மருந்துக்கடையில் கிடைக்கப் பெறும் ஜடா மாட்சி பொடி, நெல்லிக்காய் பொடி ஆகியவற்றை கலந்து நன்கு அரைத்து பேன் கடி உள்ள இடத்தில் பூசிக்கொண்டால் முடி வளரும்.

வாரத்தில் 2–3 முறை இரவு வேளை தகுந்தளவு எலுமிச்சை பழ இரசத்தில் ஒரு டீ ஸ்பூன் ஆலமர விழுது பொடி, ஒரு டீஸ்பூன் நெல்லிக்காய் பொடியைக் கலந்து ஊறவைத்து காலை மிருதுவாக அரைத்து தலைக்கு பூசி 2 மணி நேரம் கழித்து தலைக்குளியல் செய்து கொண் டால் தலைமுடி நன்கு வளரும். மிருதுவாக தலைமுடி மாறும். பொடுகுத் தொல்லையும் தீரும்.

காயவைத்த ஆலமர பழங்கள்,ஆயுர்வேத கடையில் கிடைக்கும் அதிமதுரம், கற்கண்டு பொடி ஆகியவற்றை சமமாக கலந்து மூன்று வேளை, வேளைக்கு1–2 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் உடலின் சூடு குறையும்.

இந்த மருந்தை உட்கொண்டால் வயிற்று எரிச்சல், வாய்ப்புண், மாதவிடாயின் போது ஏற்படும் இரத்தப்போக்கு குறையும்.மேலும், சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல், கை, கால் எரிச்சல் ஆகியவையும் குறையும்.

சருமம் காயம் பட்டபோது ஆலமர இலைகளை எடுத்து சூடு செய்து கட்டினால் வெகு விரைவில் காயங்கள் குணமாகும்.

ஆலமர பால், பனங்கற்கண்டு சம அளவில் கலந்து அரைத்து வைத்துக்கொண்டு நாள்தோறும் 2 வேளை அரை டீஸ்பூன் வீதம் உட்கொண்டு 100 மி.லி. பால் குடித்து வந்தால், ஆண்களுக்கு உள்ள ஆண்மைக்குறைவு ஆகியவை நீங்கி சந்தோஷமான வாழ்வு வாழ வழி உண்டாகும்.

நாள்தோறும் இரவு 200 மி.லி. நீரில் ஆலமரப் பட்டை களைப் பொடியாக்கி காலை 100 மி.லி. நீர் ஆகும்வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி வெறும் வயிற்றில் உட்கொண்டால் சிறுநீரகக் கோளாறுகள், அதிக அளவில் சிறுநீர் கழித்தல் ஆகியவை குறையும்.

நாள்தோறும் காலை 3–5 கிராம் ஆலமர இலைப் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து குடித்து வந்தால் உடம் பிற்கு கெடுதல் விளைவிக்கக் கூடிய கெட்ட கொழுப்பு சத்துக்கள் குறைந்து நெஞ்சுவலி போன்ற இதய நோய்களும் வராது.

**தெலுங்கு மூலம்:**
**டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.**
**தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.**





# ஜுலை 2025

# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. சகோதரர்களுக்கு நன்மையுண்டு. வரவிற்கேற்ற செலவுண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். பெண்களுக்குக் குடும்பத்தில் உயர்வு உண்டு. நினைத்ததைச் சாதிக்கும் மாதமிது.

**ரிஷபம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பெற்றோரின் ஆரோக்யம் நன்கு அமையும். தொழிலில் நல்ல லாபம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சகோதர சகோதரிகளின் ஆதரவு உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு–மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பலவிதத்திலும் நன்மை தரும் மாதமிது.

**மிதுனம்**

வெளிநாடு யோகம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். இளைய சகோதரனின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. குழந்தைகளின் கல்விக்காகச் செலவு அதிகமாகும். பெண்களுக்கு நினைத்த காரியம் நடக்கும். கோபத்தைத் தவிர்த்தால் நன்மை பெறும் மாதமிது.

**கடகம்**

புதிய வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனம் வாங்குவதைத் தவிர்க்கவும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டுக் காரியத்தைச் சாதிப்பீர்கள். இரவு நேரப் பயணங்களைத் தவிர்க்கவும். கண்கள், பற்களில் சிகிச்சை செய்ய நேரிடும். பெண்களுக்கு குடும்பத்தில் சிறு சச்சரவு ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**சிம்மம்**

எடுத்த காரியங்களில் தாமதமானலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.புதிய முயற்சிகளை எச்சரிக்கையுடன் செய்யவும். வேலைப்பளு அதிகரிக்கும். அடிக்கடி கைகால், முதுகு வலியினால் அசதி உண்டாகும். செலவு அதிகமாகும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண் பெறுவர். தெய்வ அருளால் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

திருஷ்டியினால் தொழில் துறையில் மந்தமாகும். பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளு அதிகமாகும். தொழில் போட்டியில் வெற்றி பெறச் செலவுகள் அதிகமாகும். தொழில் அலைச்சலினால் தூக்கம் குறையும். பெண்களுக்கு குடும்பத்தில் வேலை அதிகமாகும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**துலாம்**

தொழில் நிமித்தமாக அலைச்சல் அதிகமாகும். பாக்கிகள் வசூலாகும். தந்தை மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.. கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். மாணவர்கள் எதிர்பார்த்ததை விடக் குறைவான மதிப்பெண் பெறுவர். மிகவும் அலைச்சலான மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். இடமாற்றத்தைத் தவிர்த்தல் நலம். வீண் வார்த்தைகளைத் தவிர்க்கவும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**தனுசு**

தொழில் துறையில் பணம் முடக்கமாகும். தம்பதி இடையே சச்சரவுகள் உண்டாகும். பழைய பாக்கி வசூலாவதில் தாமதமாகும். தாய்க்கு உடல் வலி உண்டாகும்.கோபத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் எதிர் பார்த்த மதிப்பெண்கள் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டாகும். சகோதரர்களுக்கு நன்மையுண்டு. மிகவும் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**மகரம்**

சகோதர வழியில் தொந்தரவு உண்டு. தொழிலில் தைரியமாகக் காரியங்கள் செய்து வெற்றி பெறுவீர். வயிற்றில் நோயுண்டாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டிய மாதமிது.

**கும்பம்**

தொழிலில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. கோபத்தைத் தவிர்ப்பது நலம். உடல் உஷ்ணம் காரணமாக வயிறு உபாதை உண்டாகும். பெற்றோரின் ஆரோக்கியம் அனுசரனையும் நன்கு அமையும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. நல்லோர் நட்பு கிடைக்கும். நினைத்ததைச் சாதிப்பீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**மீனம்**

காரியங்கள் தாமதமாகும். நண்பர்கள், உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். சகோதர வழியில் சுப காரியங்கள் நடக்கும். தந்தையின் ஆரோக்கியம் நன்றாக இருந்தாலும், தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் வேலைப்பளு அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். குறையும் நிறையும் கலந்த மாதமிது.




# ரகசியம் அறிவோம்!

- திரு.எஸ். இராமதாஸ், புதுச்சேரி, 9976889162.

ஒரு துறவி மரணப் படுக்கையில் இருந்தார். சீடர்கள் அனைவரும் அவரைச் சுற்றி இருந்தனர். குருவைக் காண ஓர் இளைஞன் வந்தான். பல வருடங்களுக்கு முன் அவருடைய கருத்துக்களை ஏற்க மறுத்துப் பிரிந்து சென்ற சீடன் அவன். துறவியின் அருகில் வந்து வணங்கி நின்றான்.

“உலகம் எங்கும் சென்று பார்த்தேன். பலரிடம் வழிகாட்டுதல் கேட்டேன். கடைசியில் நீங்கள் சொன்னது எல்லாம் சரிதான் என்று அறிந்து கொண்டேன் குருவே” என்றான்.

துறவி அவனைப் பார்த்து புன்னகை செய்தார். “இதுவரை யாரிடமும் சொல்லாத சில அரிய ரகசியங்களை உனக்கு சொல்லித் தருவதற்காகக் காத்திருந்தேன்” என்றார். மற்ற சீடர்கள் கோபம் கொண்டனர். “எங்களைவிட அவன்தான் முக்கியமா? உங்களுடன் கடைசி வரை விசுவாசமாக இருந்த எங்களிடம் சொல்லாத ரகசியத்தை உங்களை விட்டு ஓடிப்போன அவனிடம்தான் சொல்வீர்களா?” என்றனர். துறவி அவர்களைப் பார்த்து, “நீங்கள் என்னை நம்பினீர்களே தவிர, உங்களை நம்பவில்லை. அவன்தான் தன்னை நம்பித் தேடுதலுடன் போனான். அவன்தான் என் உண்மையான சீடன்” என்றார்.

**குரு சீடருக்கு உணர்த்தும் நீதி:**

நாம் பெரிதும் மதிக்கும் ஒருவர் சொல்கிறாரே என்பதற்காக எல்லாவற்றையும் ஏற்கக்கூடாது. எதையும் கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. எதையும் நம் அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம் கண்களால் தரிசிக்க வேண்டும். அது தான் நம்மை எல்லா ரகசியங்களையும் அறிந்து முழுமை பெறச் செய்யும்.

# வேதவியாஸ மஹரிஷி

பண்டிதர்களாலும், பாமரர்களாலும் கலியுகத்தின் கொடுமைகள் நீங்க, பிரபலமாக, பட்டி தொட்டிகளிலெல்லாம் பாராயணம் செய்து வரப்படுகின்ற ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் துவக்க வரிகளில் வேதவியாச பகவானைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவை, தற்போது நம் சிந்தனைக்கு உரியவையாகும்.

*“வ்யாசம் வஸிஷ்ட நப்தாரம், சக்தே: பௌத்ரமகல்மஷம் |*
*பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம் ||”*

வசிஷ்டருடைய கொள்ளுப்பேரனும், சக்தியினுடைய பேரனும், பராசரருடைய புத்ரனும், சுகரின் பிதாவுமான வியாசரை வணங்குகிறேன்.

மேலும் அதில் கூறப்படுவதாவது:

*“வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே |*
*நமோவை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம:||”*

விஷ்ணு வடிவுள்ள வியாஸராகவும், வியாஸர் வடிவம் கொண்ட விஷ்ணுவாகவும், வேதத்தின் பொக்கிஷமாகவுமுள்ள அவருக்கு நமஸ்காரம். வசிஷ்டர் குலத்துதித்த அவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

*“குரு ப்ரஹ்மா குருர் விஷ்ணு குரு: தேவோ மஹேஸ்வர:*
*குரு: ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:”*

எனப் பாரெங்கிலும் தம் குருவை ஆராதிக்கும் விதமாக “வியாச பூஜை” முதன்முதலில் துவக்கி வைத்த பெருமை ஸ்ரீசுகப்ரும்மத்தையே சாரும்.




# பல்சுவைப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!

பாதையைக் கண்டு பிடி!








கோதா தேவி ஸ்ரீகிருஷ்ணரை சென்றடைவதற்கான பாதையைத் தேர்ந்தெடுங்கள்!

இந்தப் படங்களைப் பாருங்கள்!



வரிசை படுத்துங்கள் பார்ப்போம்!!

விடை : 1,6,4,3,7,2,5,8

கோதையின் சித்திரங்களை வரிசைப்படுத்தவும்!

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-36



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று கூறியவர் ............
2. ஆண்டாளை மணம் கொண்ட திவ்ய தேசப் பெருமாள் ............
3. ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்த ஆசார்யர் ............
4. நாதமுனிகளின் திருஅவதார மாதம் ............
5. ஆண்டாள் அவதரித்த மாதம் நட்சத்திரம் ............
6. தன்னுடைய கண்களை ஆசார்யருக்காகத் தியாகம் செய்தவர் ............
7. ஸ்ரீராமருக்கு ஆதித்ய ஹ்ருதயம் உபதேசித்தவர்............
8. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி எனப் போற்றப்படுபவர் ............
9. பராசரருக்கும் மச்சகந்திக்கும் மகனாகப் பிறந்தவர் ............
10. ந்யாச விம்சதி என்னும் ஸ்தோத்திரம் அருளியவர் ............
11. உபதேச ரத்தின மாலையை அருளிச் செய்தவர் ............
12. உத்தராயண காலத்தின் இறுதி மாதத்தின் பெயர் ............
13. திருக்கண்ணமங்கை ஆண்டான் அவதரித்த மாதம், நட்சத்திரம் ............
14. சங்கு, சக்கரத்தோடு முருகன் அருள்புரியும் தலம் ............
15. வில்லிபுத்தூர் பட்டர் பிரான் எனப் போற்றப்படுபவர் ............

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.07.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**



| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



- சரவணப் பொய்கையில் தோன்றியவர்
- தணிகை மலையில் வீற்றிருப்பவர்
- தந்தைக்கு உபதேசம் செய்தவர்
- வேல் என்ற ஆயுதத்தை கொண்டு விளங்குபவர்
- ஆறு முகங்கள் கொண்டவர்
- மயிலை வாகனமாகக் கொண்டவர்
- கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டவர்
- தடி(தண்டு எனும் ஆயுதம்)யை கையில் வைத்திருப்பவர்

## விடைகள்

1) சரவணன், 2)தணிகாசலன், 3) கந்த குரு, ஸ்வாமிநாதன், 4) வேலாயுதன், 5) ஆறுமுகன், ஷண்முகன், 6) மயூரன்,மயில்வாகனன், 7) கார்த்திகேயன், 8) தண்டாயுதபாணி.



## கணித விளையாட்டு

இங்கு குவளையில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான தட்டுகளில் உள்ள விடையைப் பொருத்துக




**விடைகள்**

1) iv, 2) iii, 3) vi, 4) ii, 5) i



குழந்தைகளே!
நலமாக இருக்கிறீர்களா?
என்ன பறவை பேசுகிறதே
எனப் பார்க்கிறீர்களா?
நீங்கள் என்ன பேசினாலும்
திரும்பி அதையே நான் பேசுவேன்!
நான் மதுரையில் மீனாட்சி தேவியின்
வலது திருக்கரத்தில் அமர்ந்திருப்பேன்!
கோதை நாச்சியார், ஆண்டாள் என்று போற்றப்படும்
பூமாதேவியின் இடது திருக்கரத்தில்
அமர்ந்திருப்பேன்.
ஒரு சில திருக்கோயில்களில் என் மீது தெய்வத்
திருமேனிகளை எழச் செய்து திருவீதி உலா வருவர்.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது
மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில்
நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...

விடை : பச்சைக்கிளி

**சித்திரக்கதை**

# குழந்தைப்பருவத்திலே நல்லதை செய்!

*கதை மூலம் :* திருமதி வா.நாகவல்லி

*சித்திரம் :* டாக்டர். ஸ்ரீதரன்

அஸ்தினாபுரத்தில் பாண்டவர்களும், கௌரவர்களும் கல்வி கற்றலிலும், கேளிக்கைகளிலும் இருந்தனர்.அச்சமயத்தில் பீமன் கௌரவர்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்தான். பீமனின் இன்னல்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கௌரவர்கள் தன் அண்ணனான துரியோதனனிடம் முறையிட்டனர். அதன் பின்னர்...

அண்ணா துரியோதனா! அந்த பீமனின் இன்னல்களைத் தாங்க இயலவில்லை.

என்ன செய்கிறான் அந்த பீமன்.

எங்களின் தலைமுடியைப் பிடித்துஇழுத்து கீழே தள்ளி விட்டு அடிக்கின்றான். அவனால் எமக்குத் தலைவலி தான்.

கீழே தள்ளி விட்டு அடிக்கின்றானா?



எங்களில் பத்துபேரை ஒரு கை இடுக்கிலும், மற்றொரு பத்து பேரை ஒரு கை இடுக்கிலும் பிடித்துக் கொண்டு தண்ணீரில் மூழ்கடிக்கின்றான். மூச்சுக்கூட விட முடியவில்லை.

தண்ணீரில் மூழ்கடிக்கின்றானா அவன்!.

மரத்தில் ஏறி குதித்து விளையாடும் விளையாட்டில் மரத்தின் மீது இருக்கும் போது, மரங்களை ஆட்டுவித்து பழங்களைப் போன்று எங்களை கிழே விழ வைக்கின்றான். எங்களால் வலித் தாங்கிக் கொள்ள முடியவில்லை அண்ணா.

இவ்வாறெல்லாம் கூட செய்கின்றானா அவன்!.



அவனுடைய போக்கு சரியில்லை. அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் செல்லுங்கள்.

அப்படியே அண்ணா. அவனை ஏதாவது செய்யுங்கள்.

துரியோதனன் தன் தந்தை திருதராஷ்டரிடம் இவ்வாறாகக் கூறலானான்.

தந்தையே வணக்கம். ப்ராணகோடி தீர்த்தம் அருகில் வனபோஜனம் செய்திட ஆசையாக உள்ளது. அதற்கு ஏற்பாடுகளைச் செய்திடுங்கள்.

அப்படியே செய்கின்றேன் மகனே.






ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர். குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்ற பகையும், பழிவாங்கும் மனநிலையும் நாம் வளர வளர அதுவும் நம்மோடு வளர்ந்திடும். ஆதலால் குழந்தைப் பருவத்திலேயே தீய எண்ணங்களை விட்டோமேயானால் அதன் பின்னர் நம் வாழ்க்கையில் அமைதியும் சௌக்கியமும் கை கூடும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ____________________
(பெரிய எழுத்துக்களில்) ____________________
____________________
____________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



ஐதராபாத், ஹிமாயத் நகரில் அமைந்துள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய பிரம்மோத்ஸவத்தில் 05-06-2025 அன்று நடைபெற்ற கருட வாகன சேவையில் பங்கு கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு தம்பதியினர்



28-05-2025 அன்று ஸ்விம்ஸ் மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டடத்தைத் தணிக்கை செய்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் திருப்பதி இணைச் செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், ஸ்விம்ஸ் மருத்துவமனை இயக்குனர்



05-06-2025 அன்று உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு திருமலையில் 80 விழுக்காடு பசுமையைக் கொண்டு வரும் நோக்கத்தோடு மரம் நடும் விழாவினைத் துவக்கி வைத்த தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சிஎச். வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



23-05-2025 அன்று தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பொறுப்பேற்ற திருப்பதி துடாத் தலைவர் திரு. சி.திவாகர் ரெட்டி அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



தி.தி.தே. பிரதான கண்காணிப்பாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு.கே.வி.முரளிகிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள் 05-06-2025 அன்று திருமலையில் திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்த போது



தி.தி.தே. ஸப்தகிரி சமய மாத இதழின் ஆசிரியர் டாக்டர்.வி.ஜி.சொக்கலிங்கம் அவர்கள் 31-05-2025 அன்று பிரதான ஆசிரியராக (முழு கூடுதல் பொறுப்பு) நியமிக்கப்பட்டு பதவிப்பொறுப்பினை ஏற்றபோது

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-06-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

